பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 11 வியாழக்கிழமை 28.10.2021 கதிர் 357

**இனி இது ரகசியம் அல்ல!**

பதின்மூன்றாவது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபை முறைமையை முழு அளவில் நடைமுறைப்படுத்தும் படி இலங்கை அரசை வற்புறுத்துமாறு தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் சேர்ந்து இந்தியாவைக் கோர வேண்டும் என்ற ☞ 2

# ஞானசாரரைத் தலைவராகப் போட்டால் உள்ளே என்ன நடக்கும் எனப் புதிதாக வகுப்பெடுக்கத் தேவையில்லை

## கோட்டா நியமித்த செயலணிக்கு எதிராக மனோ போர்க்கொடி

'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி செயலணியில் தமிழ்ப் பிரதிநிதி ஒருவரேனும் நியமிக்கப்படாமை குறித்து எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் விசனம் தெரிவித்துள்ளார்.

அரசின் 'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்ற கொள்கையை நடைமுறையாக்குவதற்காக ஆராய்ந்து, அறிக்கை சமர்பிக்கும்படி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 13 உறுப்பினர்களைக் கொண்ட செயலணியை நியமித்துள்ளார்.

குறித்த செயலணியில் 'பொது மன்னிப்பு பெற்ற (பாவமன்னிப்பு?) ஞானசார தேரரைத் தலைவராகவும், ஒன்பது சிங்கள நபர்களும், நான்கு முஸ்லிம்களும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு தமிழரின் பெயரும் இல்லை என்று மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.


முஸ்லிம் பெயர்கள் இருக்கின்றன என்பதாலேயே முஸ்லிம்களுக்கு நியாயம் வழங்கப்படப் போகின்றது என்பதல்ல.

உண்மையில் முஸ்லிம்களைத்தான் இங்கே குறி வைக்கிறார்கள். அதற்குக் கூடவே துணைக்கு சில முஸ்லிம்களை வைத்துக்கொள்ளப் போகின்றார்கள் என்பதுவே பட்டவர்த்தனம்.

ஞானசாரரைத் தலைவராகப் போட்டால், உள்ளே ☞ 11



# இனப்படுகொலையின் ஒரு பரிமாணமே ஞானசாரர் தலைமையிலான செயலணி



## கோட்டாவின் சிங்கள பௌத்த வெறி நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்று விக்கி வலியுறுத்து

**சிங்கள பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சட்டத்தை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்த ஞானசார தேரர் தலைமையிலான செயலணியின் குறிக்கோளாகும். தமிழர்களைப் பொறுத்த வரையிலே அவர்களுக்கு எதிராக 1948ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இனப்படுகொலையின் இன்னுமொரு பரிமாணமே இந்தச் செயலணி.**

**– இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.** ☞ 11

## ஞானசார தேரரின் நியமனத்துக்கு ரிஷாத்தின் கட்சியும் கண்டனம்!



விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட 'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்பதற்கான செயலணியின் தலைவராக கலகொட அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டுள்ளமை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

– இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார். ☞ 2

## 'ஒரே நாடு - ஒரே சட்டம்' உருவாக சகலரும் ஒத்துழைக்க வேண்டும்

### ஜனாதிபதியின் தீர்மானம் மகிழ்ச்சியளிக்கின்றது என்கிறார் செயலணியின் தலைவர் ஞானசார தேரர்

அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும், முரண்பாடற்ற வகையிலும் ஒரே நாடு – ஒரே சட்டம் உருவாக்கத்துக்கான சட்டவரைபு தயாரிக்கப்படும். சமூகத்தின் மத்தியில் காலம்காலமாக புரையோடிப் போயுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னெடுத்த தீர்மானம் மகிழ்வுக்குரியது.

– இவ்வாறு 'ஒரே நாடு – ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

விசேட ஜனாதிபதி ☞ 2



## கழிவகற்றும் உழவு இயந்திரத்துடன் ஹயஸ் ரக வாகனம் மோதி விபத்து!

### 4 பேர் வைத்தியசாலையில்



(வவுனியா நிருபர்)

கனகராயன்குளம் பகுதியில் பிரதேச சபையின் கழிவகற்றும் உழவு இயந்திரமும் ஹயஸ் ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் 4 பேர் காயமடைந்துள்ளனர் என்று கனராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இடம்பெற்ற இவ்விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா வடக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான கழிவகற்றும் உழவு இயந்திரம் ☞ 2

## 48 மணிநேரம் மின் தடை அபாயம்

இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்கள் பணிப்பகிஷ்கரிப்பு ஒன்றுக்குத் தயாராகுவதாக அறிவித்துள்ளன.

தாம் பணி பகிஷ்கரிப்புக்குச் செல்வதாக இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டணியின் அமைப்பாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

கெரவலப்பிட்டி யுகதனவி மின்னுற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் தீர்மானத்துக்கு தொழிற் ☞ 11

## நான் பௌத்தத்துக்கு எதிரானவன் அல்லன்

### யாழ்.மேயர் மணி தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

நான் பௌத்த மதத்துக்கு எதிரானவனும் அல்ல மதவாதியும் அல்ல என்று யாழ்ப்பாணம் மாநகர மேயர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்றது. அதன்போது, நாக விகாரையின் விகாராதிபதி ஆரியகுளத்தின் புனரமைப்பு பணிகளை நிறுத்துமாறு ☞ 11



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஒரு முயற்சியை ரெலோ ஆரம்பித்திருக்கின்றது. அது குறித்து என் பத்தியில் சில விடயங்களைச் சுட்டிக் காட்டியிருந்தேன்.

இதற்கான கூட்டம் ஒன்றை எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் கூட்டுவதற்கும் ரெலோ ஏற்பாடு செய்திருந்தது.

மாப்பிள்ளை இல்லாமல் திருமண ஏற்பாடு என்ற மாதிரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், சுமந்திரன் போன்றோருக்கு இந்தக் கூட்டம் குறித்து எந்தத் தகவலும் தெரிவிக்காமலேயே ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று சுட்டிக்காட்டியிருந்தேன்.

நீண்ட காலமாக – ஒரு தசாப்தத்துக்கு மேல் – இலங்கைத் தமிழர் விவகாரத்தில் பிரதான தமிழர் தரப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே இந்தியா – புதுடில்லி அரசுத் தலைமை – கையாண்டு வருகின்றது. அதுவும் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனுடன்தான் அந்த 'டீலிங்' எல்லாம்.

ஆனால், இந்தியாவை ஒன்றுபட்டுக் கோரும் ஏற்பாடு என்ற பெயரில் சம்பந்தனுக்கே எதுவும் தெரிவிக்காமல், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி ஒன்றினால் இந்த முயற்சி எடுக்கப்படுகின்றது. இதனால் தமிழரசுக்குள் அதன் தலைவர் மாவை சேனாதிராசாவைத் தவிர்த்து ஏனையோர் கொதித்துப் போயிருக்கின்றனர் என்று கோடி காட்டியிருந்தேன்.

எனது பத்தியில் இது பற்றி இரண்டொரு தினங்களுக்கு முன் குறிப்பிட்டமையும், இதே விடயத்தை அன்றைய தினம் 'காலைக்கதிர்' ஆசிரிய தலையங்கமாகக் கையாண்டமையும் சரியாக வேலை செய்திருக்கின்றது.

நேற்று மாலை ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கொழும்பில் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனைத் தனித்துத் தேடிப் போய்ச் சந்தித்திருக்கின்றார்.

கூட்டம் குறித்தும், ஏற்பாடுகள் குறித்தும் செல்வம் விளக்கியிருக்கின்றார். ஆனால் சம்பந்தன் ஐயாவோ புதிதாக அப்போதுதான் விடயங்களை அறிபவர் போல எல்லாவற்றையும் செவிமடுத்தார். திட்டவட்டமாக – தெளிவாக – பதில் ஒன்றையும் கூறாமல் விடயத்தை உள்வாங்கி, இழுத்தடித்தடிக்கின்றார் என்று தெரிகின்றது.

இந்தியாவுக்குப் பொதுக் கோரிக்கை முன்வைப்பது, கடிதம் எழுதுவது போன்றவை என்றால் ஆழமாக, விரிவாக ஆராய வேண்டும், சிந்திக்க வேண்டும். இவ்விடயங்களை நீண்ட காலமாக நாம் இந்தியாவுடன் பேசி வருகின்றோம். ஆகையால் அவசரப்பட்டு ஒரு முடிவை எடுக்க முடியாது. ஆலோசிக்கத்தான் வேண்டும் – என்று பிடி கொடுக்காமல் பதிலளித்தார் ஐயா என அறியவந்தது.

"அதுதான் ஐயா உங்களை அழைக்கின்றோம். இருந்து பேசி, ஆராய்ந்து, விரிவாகக் கலந்தாலோசித்து முடிவு செய்யலாம். 2ஆம் திகதிக் கூட்டத்துக்கு நீங்கள் நேரில் வந்து தலைமை வகியுங்கள்." – என்று கோரினார் செல்வம்.

தம்மால் யாழ்ப்பாணத்துக்கு வரமுடியாது என்று குறிப்பிட்ட சம்பந்தன் ஐயா, ஏன் கொழும்பில் கூடாமல், யாழ்ப்பாணத்தில் கூட்டத்தை ஏற்பாடு செய்தீர்கள் என்று கேட்டார் எனவும் அறியவந்தது.

"அப்படித்தான் தீர்மானித்துள்ளோம். நீங்கள் நேரில் வந்து தலைமை வகிக்க முடியாவிட்டாலும் கொழும்பில் இருந்தவாறே 'சூம்' முறையில் பங்குபற்றுங்கள்." – என்று செல்வம் ஒரு துரும்பைத் தூக்கிப் போட்டார்.

ஆனால் ஐயா அதற்கும் ஒரு தெளிவான பதிலைக் கூறவில்லை.

சி.வீ.விக்னேஸ்வரன், சித்தார்த்தன், சுரேஷ் பிறேமச்சந்திரன், மாவை சேனாதிராசா, சிறீகாந்தா, மனோ கணேசன் எல்லோரும் கூட்டத்துக்கு வர சம்மதித்துள்ளனர் எனக் குறிப்பிட்ட செல்வம் அடைக்கலநாதன், றவூப் ஹக்கீமையும் கூட்டத்துக்கு அழைத்துள்ளோம் என்றும் கூறினார்.

எல்லாவற்றையும் ஆறுதலாக செவிமடுத்த சம்பந்தன் ஐயா, பார்ப்போம், அனைத்தையும் யோசித்து நாளை அல்லது மறுதினம் தாம் பதில் கூறுவார் எனச் சொல்லி செல்வம் அடைக்கலநாதனை அனுப்பி வைத்தார் என அறியவந்தது.

இந்த விடயங்கள் எதிலும் சுமந்திரனைச் சேர்க்காமல், செல்வம் தரப்பு வெட்டி ஓடுவதை சம்பந்தன் ஐயா நேற்றைய உரையாடலில் ஆழமாகக் கவனித்தார் என அவரின் உதவியாளர் ஒருவர் பின்னர் தெரிவித்தார்.

"மாவை சேனாதிராசா கூட்டத்துக்கு வருவார் என்று கூறினாரா?" – என்று ஒரு சந்தர்ப்பத்தில் சம்பந்தன் ஐயா செல்வத்திடம் கேட்கத் தவறவில்லை என்றும் அவர் சொன்னார்.

இதற்கிடையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல்குழு இன்று மாலை 7 மணிக்கு சூம் முறையில் கூடுகின்றது. மேற்படி 2ஆம் திகதிக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா முடிவு எடுத்திருக்கின்றார் என்று கூறப்படும் விடயம் இன்றைய கூட்டத்தில் பிய்த்துதறப்படக் கூடும்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டத்தை ஒன்று கூட்டுவது என்று தீர்மானித்து, அதற்கான திகதியையும் முடிவு செய்த பின்னர் –

அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானத்தை எல்லாம் இறுதியாக்கிய பின்னர் –

கூட்டமைப்புத்தலைவருக்கேதெரியாமல் தம்பாட்டில் இத்தகைய நடவடிக்கைகளை ரெலோ முன்னெடுப்பது அரசியல் போக்கிரித்தனம் என்று விமர்சனம் (இந்தப் பத்தியிலும் சேர்த்து) எழுந்த பின்னர், ஒப்பாசாரத்துக்கு தமக்கு விடுக்கப்பட்டிருக்கும் அழைப்பை சம்பந்தன் ஏற்றுக்கொள்வாரா என்பது சந்தேகமே.

இனி, இரண்டு விடயங்கள் நடக்கலாம். கூட்டமைப்பின் தலைவர் என்ற முறையில் பங்காளிக் கட்சிகளின் தலைவர் மாவை சேனாதிராசா, சித்தார்த்தன் போன்றோருடனும் சுமந்திரனுடனும் இவ்விவகாரம் குறித்து சம்பந்தன் ஐயா இன்று அல்லது நாளை கலந்தாலோசனை செய்வார் என்று நினைக்கிறேன்.

சில சமயங்களில் தமது பிரதிநிதியாக சுமந்திரனையே அனுப்பி, தம் சார்பில் கூட்டத்துக்கு தலைமை வகிக்க அவர் பணித்தாலும் ஆச்சரியப்படுத்துதற்கில்லை.

நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த சுமந்திரனிடம் இக் கூட்டத்துக்கு அவருக்கு அழைப்பு வந்ததா என்று கேட்டேன்.

'உங்கள் பத்திரிகையில் செய்தியைப் பார்த்துத்தான் இத்தகைய கூட்ட ஏற்பாடு பற்றி நான் அறிந்தேன். அத்திகதியில் எனக்குக் கொழும்பில் நீதிமன்ற சேலைகள் உள்ளன" என்றார் அவர்.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட படி சம்பந்தன், சுமந்திரனை வெட்டிவிட்டுக் காய் நகர்த்தும் எத்தனமாகத்தான் இது ஆரம்பமானது. ஆனால் அத்தகைய முயற்சிக்கு நியாயமாகவே எதிர்ப்புக் கிளம்பும் என்பதால் ஒப்புக்குச் சப்பாணி என்பது போல சம்பந்தனுக்கு மட்டும் பெயருக்கு நேரில் சென்று அழைப்பு வைக்கும் 'பாவ்லா' காட்டியிருக்கின்றார் செல்வத்தார்.

பல பேர் காதில் பூச்சுற்றிய சம்பந்தனுக்குதான் பூச்சுத்தப் பார்க்கின்றார் அவர். அது பலிக்கு மாற்போல எனக்குப் படவில்லை.

தமிழர் தரப்பின் பிரதான கட்சியான தமிழரசில் தனிய அதன் தலைவர் மாவை சேனாதிராசாவை மட்டும் தாஜா செய்து, காரியத்தை முன்நகர்த்தலாம் என்று கருதி 'செல்வம் அண்ட் சுரேன் கொம்பனி' செயற்படுமானல் அது பலிக்கப் போவதில்லை.

தமிழரசின் பிரதான தலைவர்கள் இவ்விடயத்தில் தள்ளி நிற்கின்றார்கள் என்று அறிந்தால் மனோ கணேசன், ஹக்கீம் போன்றோர் இந்தச் சில்லெடுப்புக்குள் சிக்காமல் – கூட்டத்துக்கு வராமலேயே – நழுவி விடுவார்கள் என்பது திண்ணம்.

பார்ப்போம் – நடப்பதை.

– மின்னல் –

## கழிவகற்றும் உழவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கழிவுகளை ஏற்றிக்கொண்டு ஏ – 9 வீதியில் புளிங்குளம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது அதே வீதி வழியாக வந்த ஹயஸ் ரக வாகனம் கனராயன் குளம் பகுதியில் வைத்து கழிவகற்றும் உழவு இயந்திரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தையடுத்து ஹயஸ் ரக வாகனம் வீதியை விட்டு விலகி தடம் புரண்டதுடன், கழிவகற்றும் உழவு இயந்திரமும் கடும் சேதத்துக்கு உள்ளாகியது.

குறித்த விபத்தில் இரு வாகனங்களிலும் பயணித்த 4 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதில் ஒருவர் வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து தொடர்பில் கனகராயன் குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (100)

## ஞானசார தேரரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:–

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையானது ஞானசார தேரர் குறித்து நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைத்துள்ளது. அதேவேளை, நீதிமன்றத்தை அவமதித்த குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுத் தண்டனை பெற்ற ஒருவரே ஞானசார தேரர்.

இது மட்டுமன்றி ஞானசார தேரர் இஸ்லாமிய நம்பிக்கைகள் மற்றும் முஸ்லிம்கள் தொடர்பாகத் தொடர்ச்சியான வெறுப்புப் பிரசாரராகத் தொழிற்பட்டு வரும் ஒருவர்.

அவ்வாறான ஒருவர் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்பதற்கான செயலணிக்கு தலைமை தாங்க எந்த விதத்திலும் பொருத்தமற்றவர்.

ஜனாதிபதியின் இந்த நியமனம் பொருத்தமற்றதும் கண்டனத்துக்கும் உரியது – என்றார்.

## 'ஒரே நாடு -ஒரே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

செயலணி நியமனம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சட்டத்தின் முன் அனைத்து இன மக்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும். நபர்களுக்கு மத்தியில் இனம், மதம், மொழி ஆகிய வரையறுக்கப்பட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வேறுப்பாடுகள் காணப்படும்போது அவ்விடயத்தில் முரண்பாடுகள் தோற்றம் பெறும்.

கடந்த காலங்களில் அவ்வாறான தன்மைகள் சமூகத்தின் மத்தியில் காணப்பட்டதைப் பல்வேறு காரணிகள் ஊடாக அறிந்துகொள்ளலாம்.

இலங்கையினுள் 'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்ற கொள்கையை உறுதிப்படுத்துவதற்கு இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் பல்வேறு காரணிகளினால் தோல்விடைந்தன.

'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்ற எண்ணக்கருவை செயற்படுத்துவதில் அரசியல் காரணிகளும், அரசியல் நோக்கங்களும் ஒருபோதும் செல்வாக்கு செலுத்தக் கூடாது.

ஒரே நாடு – ஒரே சட்டத்தை நிலைநாட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரத்தியேக ஜனாதிபதி செயலணியை நியமித்துள்ளமை மகிழ்வுக்குரியது. அனைத்து இன மக்களின் மதம், கலாசாரம் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது அவசியமாகும்.

அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் முரண்பாடற்ற விதத்தில் 'ஒரே நாடு – ஒரே சட்டம்' உருவாக்கத்துக்கான சட்ட வரைவு தயாரிக்கப்படும். அனைத்துத் தரப்பினரும் அந்த இலக்கை அடைய ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

இதுவரை காலமும் புரையோடிப் போயிருந்த பிரச்சினைகளுக்கு இனி வரும் காலங்களிலாவது சிறந்த தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அனைத்து விடயங்களையும் அரசியல் கண்ணோட்டத்தில் பார்த்தால் ஒருபோதும் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது – என்றார்.



## தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்துக்கு புதிய பணிப்பாளர் நாயகமாக ஷர்மிலா ராஜபக்ஷ

தேசிய மிருககாட்சிசாலைகள் திணைக்களத்திற்கு புதிய பணிப்பாளர் நாயகமாக ஷர்மிலா ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் இன்று (வியாழக்கிழமை) தனது கடமைகளைப் பெறுப்பேற்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் இஷினி விக்ரமசிங்க அண்மையில் தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

தனிப்பட்ட காரணத்துக்காக அவர் பதவி விலகுகிறேன் என அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses (3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

# கொரோனா குணமடைவு எண்ணிக்கை அதிகரிப்பு

கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 373 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 4 ஆயிரத்து 376 ஆக அதிகரித்துள்ளது.

அதேபோல், நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 37 ஆயிரத்து 201 அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இவர்களில் 13 ஆயிரத்து 654 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் பதவி சிவஞானசோதியின் இடத்துக்கு அருமைநாயகம்

சிவஞானசோதியின் மறைவையடுத்து பொதுச் சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு சுந்தரம் அருமைநாயகத்தை நியமிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்வைத்த பரிந்துரைக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா தலைமையில் கூடிய நாடாளுமன்ற பேரவை தனது இணக்கப்பாட்டை வழங்கியுள்ளது.

சுந்தரம் அருமைநாயகம் இதற்கு முன்னர் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் செயலாளராகக் கடமையாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு வருகின்றார் ஐ.நாவின் அறிக்கையாளர்



அடிமைத்துவத்தின் சமகால போக்குகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் டொமோயா ஒபோகாடா இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கை பற்றிய அறிக்கையிடலுக்காக நவம்பர் மாத இறுதியில் நாட்டுக்கு வருகை தரவுள்ளேன் என அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலும் குறித்த விஜயத்துக்கான தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டுவருகிறேன் எனவும் அவர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் நாடு கடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம், மனித கடத்தல் மற்றும் நவீன முறையிலான அடிமைத்தனம் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

மனித கடத்தல் தொடர்பான வடக்கு அயர்லாந்து சட்டசபை குழு, போதைப்பொருள் மற்றும் குற்றத்துக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம், இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு என்பனவற்றில் அவர் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தடுப்பூசிகள் செலுத்தாதவர்கள் பொது இடங்கள் செல்லத் தடை?

தடுப்பூசி செலுத்தியவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, எதிர்காலத்தில் தடுப்பூசி செலுத்தாதவர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய சில நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

சுகாதார அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்தார்.

அதன்படி, சில ஐரோப்பிய நாடுகள் தடுப்பூசி செலுத்தாதவர்களுக்கு எதிராக பொது இடங்களுக்குள் பிரவேசிப்பதைக் கட்டுப்படுத்துவது போன்ற பலவந்த நடவடிக்கைகளை ஏற்கனவே அறிமுகப்படுத்தியுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொருவருக்கும் அவரவர் வாழ்க்கையில் முடிவெடுக்க உரிமை உண்டு என்றபோதிலும் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாமல் ஒருவரை ஆபத்தில் ஆழ்த்துவதை அனுமதிக்க முடியாது என்று அமைச்சர் கூறினார்.

எனவே, எதிர்காலத்தில் தடுப்பூசி செலுத்தாதவர்களுக்கு எதிராக சில நடவடிக்கைகளைச் செயற்படுத்த நிர்ப்பந்திக்கப்படலாம் என்றும் அவர் மேலும் கூறினார்.

செப்ரெம்பர் 15ஆம் திகதி முதல் தடுப்பூசி அட்டைகளைக் கட்டாயமாக்க அரசாங்கம் முடிவு செய்தது.

அதன்படி, செப்ரெம்பர் 15ஆம் திகதி முதல் பொது இடங்களுக்குச் செல்லும் போது 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் தடுப்பூசி அட்டையை எடுத்துச்செல்ல வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

இருப்பினும் போதிய தடுப்பூசிகளைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டதால், எதிர்பார்த்தபடி தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையை அரசாங்கத்தால் முடிக்க முடியாததால், இந்த நடவடிக்கை செயற்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# இலங்கையைச் சூழ உள்ள கீழ் வளிமண்டலத்தில் தளம்பல்

## வானிலையில் பாதிப்பு

இலங்கையைச் சூழவுள்ள கீழ் வளிமண்டலத்தில் ஏற்பட்ட தளம்பல் நிலை எதிர்வரும் சில நாள்களில் நாடு முழுவதும் வானிலையைப் பாதிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் குறிப்பாக மாலையில் அல்லது இரவில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேல், தென், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீ. இற்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்கு மற்றும் தெற்கு கரையோரப் பிரதேசங்களில் காலை வேளையிலும் மழை பெய்யும் என அந்தத் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாகப் பலத்த காற்றும் வீசக் கூடும் என்பதோடு, மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அந்தத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வருகின்றது புதிய பூச்சாண்டி

அரசியல் நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு ஒரு தந்திரோபாயம் இருக்கின்றது. ஒரு பிரச்சினையை எதிர்கொள்வதற்கு – அல்லது அதன் பக்கமான சிரத்தையைத் திசை திருப்பி விடுவதற்கு – இன்னொரு புதிய பிரச்சினையைக் கிளப்பி விடுவதுதான் அது.

அந்தத் தந்திரோபாயத்தைத் தான் கோட்டாபய ராஜபக்ஷ முன்னெடுகின்றார் போலும்.

நாட்டில் மோசமான பல பிரச்சினைகள். பணவீக்கம், அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி உயர்வு, அவற்றை இறக்குமதி செய்வதற்குக் கூட அந்நிய செலாவணிக் கையிருப்பு இல்லை, வெளிநாட்டுப் படுகடன்களுக்குரிய தவணைப் பணத்தைச் செலுத்துவதற்கு நிதி இல்லை, கஜானா காலி, விவசாயிகள் போராட்டம், மீனவர்கள் போராட்டம், தாதியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு எச்சரிக்கை, ஆசிரியர்கள் எதிர்ப்பு நடவடிக்கை என்று ஆளும் தரப்புக்கு அரசியல் நெருக்கடி தாங்க முடியாத அளவுக்கு விஞ்சிவிட்டது.

ஜனாதிபதித் தேர்தலிலிலும், பொதுத் தேர்தலிலும் சரித்திர வெற்றியீட்டிய மொட்டுக் கூட்டணியின் செல்வாக்கு இப்போது கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைமை. இதே போக்கில் நிலைமை மோசமாகப் போனால், ஆட்சிப் பீடத்திலிருந்து ஆட்சியாளர்களை மக்களே அடித்துத் துரத்தும் நிலைமை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அதனைச் சமாளிப்பதற்கு அதிகாரபீடம் இரண்டு வழிவகைகளை நாடுகின்றது என்று தோன்றுகின்றது.

ஒன்று – புதிய, வேறு பிரச்சினைகளைக் கிளறி விடுகின்றது.

அடுத்தது – மீண்டும் பேரினவாதத் தீவிரத்தை – இன வெறியைத் தூண்டிவிடுவது.

இந்த இரண்டையும், ஒரே கல்லில் வீழ்த்தும் நடவடிக்கை தான் 'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்ற முறைமையை நடைமுறைப்படுத்துவதற்காக பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் வண கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையில் விசேட ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்ட விவகாரமாகும்.

ஆரம்பமே முறையாக இல்லை. செயலணியின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 13 என்கின்றது அறிவிப்பு. அதில் தமிழர்கள் எவரும் இல்லை. நான்கு பேர் முஸ்லிம்கள்.

இந்த மண்ணின் பூர்வீகக் குடிகளான சிறுபான்மையினரின் தனித்துவக் கலாசாரங்களை – விழுமியங்களை – பழக்கவழக்கங்களை – வழக்காறுகளை – வாழ்க்கை முறைகளை நெறிப்படுத்தும் விசேட சட்டங்கள், நாட்டில் உள்ளன. மலை நாட்டு சிங்களவருக்குக் கண்டியச் சட்டம், யாழ்ப்பாணத்தவர்களுக்கு தேசவழமைச் சட்டம், முஸ்லிங்களுக்கு இஸ்லாமிய சட்டம் என்று விசேட சட்ட ஏற்பாடுகள் சுதந்திரத்திற்கு முன்பிருந்தே – நூற்றாண்டு காலம் கடந்து – இலங்கையில் நடைமுறையில் உள்ளன.

எல்லோரையும் சட்டத்தின் முன் ஒரே சமப்படுத்திப் பார்ப்பது என்ற பெயரில் – 'ஒரு நாடு; ஒரே சட்டம்' எனும் தொனிப் பொருளில் – அவர்களின் விழுமியங்களையும், விசேட கலாசாரங்களையும் உறுதிப்படுத்தும் தனித்துவச் சட்டங்களை இல்லாதொழித்து, அந்தச் சிறுபான்மை இனங்களின் தனித்துவ உரிமைகளை நசுக்குவதுதான் இந்த நகர்வின் உள்நோக்கம் என்பது பரகசியமான விவகாரம்.

ஒரு புறம், புதிய அரசமைப்பை உருவாக்க ஒரு ஜனாதிபதி செயலணி, மறுபுறம் அந்தப் பணிக்குள் உள்ளடங்கும் தேர்தல் சீர்திருத்தங்களை ஆராய்ந்து பரிந்துரைக்க பிறிதொரு நாடாளுமன்றத் தெரிவுக்குழு, புதிய அரசமைப்புக்குள் வரக்கூடிய சட்ட விவகாரங்களைத் தனியாகக் கையாள இப்போது ஒரு செயலணி. இப்படி பல்வேறு அமைப்புக்களை நிறுவுவதன் மூலம் கோட்டா அரசு என்ன சாதிக்கப்போகின்றது – மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதைத் தவிர?

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டில் சிறைக்குள் முடங்கிக் கிடந்த ஞானசாரருக்குப் பொது மன்னிப்பு அளித்து விடுவித்த சமயத்தில் 'ஒரு பேரினவாதக் கடி நாய் அதன் கூட்டிலிருந்து திறந்து விடப்பட்டிருக்கின்றது' என்றார் சுமந்திரன் எம்.பி. இப்போது அதனை சிறுபான்மையினர் மீது உசுக்காட்டி ஏவி விட்டிருக்கின்றனர். அவ்வளவுதான்...!

## பதிவாளர் பதவியுடன் சமாதான நீதிவான் பட்டத்தையும் வழங்க மஹிந்த ஆலோசனை

பதிவாளர் பதவியை வழங்கும் போது நீதியமைச்சுடன் கலந்துரையாடி அவர்களுக்கு சமாதான நீதிவான் பதவியையும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாடளாவிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர் சங்கத்தின் உறுப்பினர்களுடன் அலரிமாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பதிவாளர்களுக்கு காணப்படும் தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பில் அச்சங்கத்தின் தலைவர் துஷ்மந்த கருணாநாயக்க இதன்போது கருத்து முன்வைத்தார்.

ஊதியம் இன்றி கொடுப்பனவு அடிப்படையில் பதிவாளர்கள் தொழில்சார் சேவையில் ஈடுபட்டிருப்பதுடன், தமது தொழிலை முன்னெடுத்துச் செல்வதற்கு சமாதான நீதிவான் பொறுப்பு இன்மை சிக்கலுக்குரியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர்கள் 24 மணிநேரம் முழுவதும் சேவையில் ஈடுபட்டுள்ளனர் எனச் சுட்டிக்காட்டிய துஷ்மந்த கருணாநாயக்க, ஊதியம் இன்மையால் முறையான காப்புறுதி திட்டமொன்றை தமது உறுப்பினர்களுக்குப் பெற்றுக் கொடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

அதற்கமைய பதிவாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கக் கூடிய உரிய காப்புறுதித் திட்டமொன்று தொடர்பாக ஆராயுமாறு அந்தச் சந்தர்ப்பத்திலேயே பதிவாளர் நாயகம் வீரசேகரவுக்கு பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

கொவிட் தடுப்பூசி வழங்குவதற்கான முன்னுரிமை தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடுமாறும் பிரதமர் அறிவுறுத்தினார்.

பிறப்பு, இறப்பு பதிவின் போது தற்போது கிடைக்கும் 75 ரூபா கொடுப்பனவை 150 ரூபா வரையும், அலுவலக எழுது பொருள்கள் கொடுப்பனவை 500 ரூபா முதல் 750 ரூபா வரையும் உயர்த்துவதற்கும், சேவை நிறைவின் போது 55 ஆயிரம் ரூபா முதல் 5 லட்சம் ரூபா வரையான பணிக்கொடை கொடுப்பனவை வழங்குவது தொடர்பில் 2022 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழிவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பிரதமர் இதன்போது அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமரின் மேலதிக செயலாளர் சட்டத்தரணி சமிந்த குலரத்ண, அரச சேவை, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ரத்னசிறி, தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் குணசேகர, பதிவாளர் நாயகம் வீரசேகர உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் பதவி ஜீவன் தியாகராஜா இடத்துக்கு சார்ள்ஸ்!

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து ஜீவன் தியாகராஜா விலகியமையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு பி.எஸ்.எம்.சார்ள்ஸை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரைக்கு நாடாளுமன்ற பேரவை தனது இணங்கத்தை வழங்கியுள்ளது. இவர் இதற்கு முன்னர் வடமாகாண ஆளுநராகக் கடமையாற்றியிருந்தார். இது தவிரவும் சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளராகவும், சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் அவர் கடமையாற்றியிருந்தார்.

ஒன்லைன் முறையில் நடத்தப்பட்ட இக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷிம் ஆகியோர் இணைந்துகொன்டனர்.

## ஏ.ரி.எம். உடைத்த இருவர் சி.சி.ரி.வியால் மாட்டினார்கள்

ஏ.ரி.எம். இயந்திரம் ஒன்றை உடைக்க முற்பட்ட இருவர் வெலிகட பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ராஜகிரிய பகுதியில் உள்ள அடுக்கு மாடி கட்டடம் ஒன்றுக்கு முன்னாள் இருந்த ஏ.ரி.எம். இயந்திரத்தை ஆயுதங்களால் தாக்கி உடைக்க முற்பட்டமை அங்கிருந்த சி.சி.ரி.வியில் பதிவாகி இருந்தது.

குறித்த இயந்திரத்துக்கு ஏற்பட்ட சேதம் இதுவரையில் கணிக்கப்படவில்லை எனவும் கைது செய்யப்பட்ட இருவரும் கோட்டை நகர சபை ஊழியர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த இருவரும் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## தேர்தல் விதிமுறைகளை சட்டபூர்வமாக்க முடிவு

தேர்தல் விதிமுறைகளை சட்டபூர்வமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணையகம் தெரிவித்துள்ளது.

தேர்தல் விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக இலங்கையில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலங்களில் விதிமுறைகள் வர்த்தமானி ஊடாக வெளியிடப்படுகின்றன எனவும் அவற்றை மீறுபவர்களுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு விதிமுறைகளை மீறுவதை குற்றமாக கருத்திற் கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பூஜித் மற்றும் ஹேமசிறி மீதான வழக்கு விசாரணைகள் நிறைவு

கொழும்பு, ஒக். 28

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில், தகவல்கள் அறிந்தும் அது தொடர்பில், உரிய நடவடிக்கை எடுக்காமை குறித்து, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியவர்களுக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு விசாரணை நேற்று (புதன்கிழமை) நிறைவுக்கு வந்துள்ளது.

மேற்படி வழக்கு நேற்று கொழும்பு பதில் நீதிவான் சஞ்சய கமகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதிவாதிகள் இருவருக்கு எதிராக மூவரடங்கிய விசேட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்திடம் தெரிவித்திருந்தனர்.

அதனால் அவர்களுக்கு எதிராக நீதிவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணைகளை நிறைவு செய்யுமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மேற்படி கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பதில் நீதிவான் வழக்கு விசாரணைகளை நிறைவுக்கு கொண்டு வந்துள்ளார்.

# முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழலை அமைத்துக் கொடுப்பது அரசின் பொறுப்பு

## அமைச்சர் ரமேஷ் பத்திரண உறுதி



இலங்கையில் முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழலை உருவாக்குவதும், முதலீட்டாளர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம் படுத்துவதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அரசாங்கதகவல்திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், வெளிநாட்டு முதலீடு இந்த நாட்டுக்கு இன்றியமையாதது. நாம் எதிர்நோக்கும் டொலர் பிரச்சினைக்கு தீர்வாக வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட வேண்டும். உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது, முதலீட்டாளர்கள் மிகக் குறைந்தளவு வருகை தரும் நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்படுகின்றது. அந்த நிலை மாற்றப்பட வேண்டும். என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்தியாவிலுள்ள கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரான கௌதம் அதானியை சந்தித்தமை தொடர்பாகவும், அவர் கொழும்பு துறைமுக மேற்கு முனையம் குறித்து கலந்துரையாட வந்தார் என த ஹிந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள் ளமை தொடர்பிலும், அவரின் இந்தப் பயணத்தின் உண்மையான நோக்கம் என்ன என்பது குறித்தும் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தப் பயணம் அவரது தனிப்பட்ட வருகை. நாட்டில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பாக அதானி நிறுவனம் விசாரித்து வருவதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. கொழும்பு துறைமுக மேற்கு முனைய அபிவிருத்தி திட்டத்தில் முதலீடு செய்வதில் அவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். அது உட்பட இலங்கையின் ஏனைய முதலீட்டு வாய்ப்புகள் பற்றி விசாரிக்க அவர்கள் இலங்கை வந்திருக்கலாம். இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை. என்றும் அவர் தெரிவித்தார்.

# கடலில் எண்ணெய்க் கசிவு வழக்கு; இருவரும் பிணையில் விடுவிப்பு

திருகோணமலை கடலில் எண்ணெய்க் கசிவை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் வழக்கு தொடரப்பட்டிருந்த இரண்டு நபர்களுக்கு 10 லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே குறித்த கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி கல்ப் ஏஜென்சி மற்றும் ஈ.எல்.எஸ். கன்றாக்சன் பிரைவேட் லிமிடெட் ஆகிய இரண்டு கம்பனிகளுக்குச் சொந்தமான பாச் என்று அழைக்கப்படும் இயந்திரத்திலிருந்து கடலுக்குள் எண்ணெய்க் கசிவை ஏற்படுத்தியமை தொடர்பில் கடல்வள பாதுகாப்பு அதிகார சபை மற்றும் மாவட்ட செயலகம் இணைந்து திருகோணமலை துறைமுக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தன.

இந்நிலையில் இந்த முறைப்பாடுகள் தொடர்பாக இரண்டு கம்பனிகளுக்குச் சொந்தமான இருவரையும் திருகோணமலை நீதிமன்றில் முன்னிறுத்திய போது கடல் எல்லையில் கடலை மாசுபடுத்திய குற்றச்சாட்டின் பேரில் 10 லட்சம் ரூபா பிணையில் செல்ல திருகோணமலை மேல் நீதிமன்றநீதிபதிமாணிக்கவாசகர் இளஞ்செழியன் கட்டளை பிறப்பித்தார். அத்துடன் கடலை மாசுபடுத்தியமை தொடர்பில் இதுவரை காலமும் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வந்துள்ள நிலையில், முதல் தடவையாகக் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மேல் நீதிமன்றில் கடலை மாசுபடுத்திய குற்றச்சாட்டின் கீழான வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மேலும் குறித்த இரண்டு நபர்களையும் எதிர் வரும் டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி திருகோணமலை மேல் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்குமாறும் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கட்டளையிட்டார்.

# இந்திய நட்புறவுக்குப் பாதிப்பின்றி மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு!

## அரசு தெரிவிப்பு

'இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பான பிரச்சினையை இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவுகளுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு, இராஜதந்திர ரீதியில் தீர்த்துக்கொள்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

–இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில், அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

மீனவர் பிரச்சினை தொடர்பில் இராஜதந்திர ரீதியில் இந்திய அரசுடன் இலங்கை அரசு தொடர்ச்சியாகப் பேசி வருகின்றது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக இலங்கை – இந்தியக் கடல் எல்லைகள் அடையாளமிடப்படாத ஒன்றாக இருப்பதால், இந்திய மீனவர்கள் எமது கடலுக்குள் தெரிந்தோ தெரியாமலோ நுழைகின்றனர்.

எனினும், இந்த விடயத்தில் நாடுகளுக்கு இடையிலான நட்புறவுகளைப் பாதுகாத்து, இராஜதந்திர ரீதியில் செயற்பட்டே தீர்வுகாண வேண்டும். – எனத் தெரிவித்துள்ளார்.

# 2021 வாக்காளர்கள் பட்டியலை இணையத்தில் பார்வையிடலாம்

## தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

2021 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் தமது பெயர்கள் இருக்கின்றனவா என்பதை அறிய www.elections.gov.lk என்ற இணையத்தளம் ஊடாக வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டில் காணப்படும் கொவிட் தொற்று நோய் காரணமாக 2021 ஆம் ஆண்டுக்கான வாக்காளர்களைப் பதிவு செய்யும் படிவங்கள் வீடு வீடாகக் கொண்டு சென்று விநியோகிக்கப்படாது என்பதுடன் 2020 ஆம் ஆண்டு வாக்காளர்கள் பட்டியலில் இருக்கும் பெயர்கள், 2021 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்படும் எனவும் தேர்தல் ஆணைக்குழு கூறியுள்ளது. 2020 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதி வரை கிராம சேவர்களின் அலுவலகங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும் எனவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

# காடழிப்பில் ஈடுபட்ட 5 பேர் கைதாகினர்

புத்தளம், தப்போவ சரணாலயத்துக்கு உட்பட்ட துத்தநேரிய பகுதியில் சட்டவிரோதமாக காடழிப்பு மேற்கொண்ட குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என கருவலகஸ்வெள வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் புத்தளம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து, கருவலகஸ்வெள வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் அந்தப் பகுதியில் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்புநடவடிக்கையின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இஹலபுளியங்கும், நீலபெம்ம மற்றும் பஹலபுளியங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து காடழிப்பு மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஜே.சி.பி. இயந்திரம் ஒன்று, உழவு இயந்திரம் ஒன்று, இரண்டு மோட்டார் சைக்கிள்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்ட போது, சந்தேக நபர்கள் ஜே.சி.பி. இயந்திரத்தின் உதவியுடன் சுமார் ஐந்து ஏக்கர் அளவில் காடுகளை அழித்துள்ளனர் எனக் கருவலகஸ்வெள வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இவ்வாறு காடுகளை தாம் துப்புரவு செய்தோம் என சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர் என கருவலகஸ்வெள வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

# சீன நிறுவனத்திற்கு எதிராக மற்றுமொரு தடையுத்தரவு

தீங்கு விளைவிக்கும் பற்றீரியா அடங்கிய உரத்தை இறக்குமதி செய்ததாக கூறப்படும் சீன நிறுவனம், அதன் உள்ளூர் முகவருக்கு மற்றும் மத்திய வங்கிக்கு எதிராக இலங்கை உரக் கம்பனி மற்றுமொரு இடைக்கால தடை உத்தரவை பெற்றுள்ளது. கொழும்பு வணிக நீதிமன்றம் இந்தத் தடை உத்தரவை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

மேலும், குறித்த சீன நிறுவனத்துக்காக திறக்கப்பட்டுள்ள கடனீட்டுக் கடிதத்தின் ஊடாக மத்திய வங்கியால் எவ்வித கொடுப்பனவும் செலுத்த முடியாது என குறித்த தடையுத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இல 02, வர்த்தக உயர் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சியால் கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியின் கோரிக்கையின் பேரில் சீன நிறுவனம் மற்றும் அதன் உள்ளூர் முகவர் கடனீட்டுக் கடிதத்தின் கீழ் எந்த வொருக் கொடுப்பனவையும் பெறுவதைத் தடைசெய்து இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் தங்கியிருக்கும் சீனர்களுக்கு 3 ஆவது டோஸ்

இலங்கையில் சேவை செய்யும் சீன நாட்டவர்களுள் 3 ஆயிரத்து 300 பேருக்கு தற்போது வரையில் சினோபோர்ம் தடுப்பூசியின் மூன்றாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளதாக இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

டுவிட்டர் கணக்கில் பதிவு ஒன்றை பதிவிட்டு அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 22 ஆம் திகதி முதல் 25 வரையான காலப்பகுதியில் இவ்வாறு சீன நாட்டவர்களுக்கு மூன்றாவது டோஸ் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு, கண்டி, அம்பாந்தோட்டை, புத்தளம் மற்றும் தம்புள்ளை ஆகிய பகுதிகளில் சேவையாற்றும் சீனர்களுக்கே இவ்வாறு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 174

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**435. தீர்ப்பாயத்தின் நடுவர்களாக யார் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்?**

பதினொரு பேர் தீர்ப்பாயத்தின் பட்டியலிலிருந்து பிரேரணை செய்யப்பட்டார்கள் அவர்களின் தகைமைகளும் பின்னணி பற்றியும் அறிந்து கொள்ள உதவும் என்பதற்காக அவர்களின் பெயர்களையும் சிறு குறிப்புக்களையும் தருகிறேன்.

1. பிரான்கோய்ஸ் ஹீராட்(Francois Houtart)



பிரான்கோய்ஸ் ஹீராட்

வன்முறையற்ற சிந்தனைகளுக்கும், சகிப்புத்தன்மைக்கும் (Tolerance) யுனெஸ்கோவினால் கௌரவிக்கப்பட்டவர். ஐ.நாவின் மந்த நிலை குழுவின் (Committee on Recession) தலைவர். பெல்ஜியத்தின் பல்கலைக்கழகத்தின் மதிப்புவாய்ந்த கலாநிதி. உலக சமுதாய நிலையத்தின் தொடக்க உறுப்பினர். வியட்நாம்,கியூபா நாடுகளின் விஞ்ஞான ஆய்வுப்பகுதிகளின் கௌரவ அங்கத்தினர். கொலம்பியா பல்கலைக்கழகத்தின் பரிசு பெற்றவர் - போன்ற பல.



ராஜந்தர் சச்சார்

2.ராஜந்தர் சச்சார் (Rajinder Sachar)

முன்னைய டெல்லி உயர்நீதிமன்றத்தின் நீதிபதி. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நாட்டின் முஸ்லிம் மக்களின் கல்வி, பொருளாதார, சமூக அந்தஸ்துப் பற்றி ஆராய அமைத்த குழுவின் தலைவர்.

3. நாவல் சட்டாவி (Nawel El Saadawi)

எகிப்தின் பிரபல மருத்துவர். சமூக சிந்தனைகள் பற்றிய பிரபல எழுத்தாளர். பெண்கள் உரிமைகள் பற்றி பல ஆக்கங்களும் முன்னெடுப்புக்களும் செய்தமையால் எகிப்தில் சிறை சென்றவர். 1979 - 1980 களில் பெண்கள் பற்றிய திட்டங்களுக்காக ஆபிரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் ஐ.நாவிற்காகப் பணியாற்றியவர்.



நாவல் எல் சட்டாவி

4.சூலக் சிவரக்ஷ (Sulak Sivaraksa)

தாய்லாந்தின் பௌத்த மதம் சார்ந்த சமாதான முன்னெடுப்புக்களின் தலைவர். எழுத்தாளர். பல சமூக, மனிதாபி



சூலக் சிவரக்ஷ

மான, சுற்றுச்சூழல் ஆன்மீக நிலையங்களை தாய்லாந்தில் ஏற்படுத்தி நடத்தியவர். மாற்று நோபல் பரிசு பெற்றவர்.

5.டெனிஸ் ஹலிடே(Denis Hallidey)



டெனிஸ் ஹலிடே

ஐ.நாவின் முன்னைய உதவி செயலாளர் நாயகம் (Assistant Secretary General). தனது 34 வருட சேவையை, ஐ.நா. பாதுகாப்புச்சபை ஈராக் மீது விதித்த பொருளாதாரத் தடைக்கு எதிர்ப்பாக விட்டெறிந்தவர். சமாதானத்துக்காக காந்தி சர்வதேச பரிசு பெற்றவர்.

6.ஜியானி ரோகோனி( Dr.Gianni Tognoni)

தீர்ப்பாயத்தின் காரியதரிசி

7.டானியல் பியேற்ஸ்ரெலின்(Daniel Firestein)

இனப்படுகொலை சம்பந்தப்பட்ட ஆராய்வுகளுக்கான தென் அமெரிக்காவின் Buenos Airos நகரில் அமைக்கப்பட்ட அமைப்பின் முகாமையாளரும் அங்கிருந்த பல்கலைக்கழகத்தின் இனப்படுகொலை பற்றிய பேராசிரியரும்.

8.மேரி லாவ்லர் (Mary Lawlor)

மனித உரிமை காப்பாளரின் பாதுகாப்புக்கான சர்வதேச நிறுவனமான முன்நிலை (Front Line) என்ற குழுமத்தின் முகாமையாளர்.



ஜியானி ரோகோனி

9.ஒயஸ்ரின் திவேதார் (Oystein Tveter)

சர்வதேச மனித உரிமை சட்டத்தில் சட்டவாளரும் தீர்ப்பாயத்தின் பிலிப்பைன்ஸ் நாட்டின் மனித உரிமை மீறல்களையும் சட்ட விரோத கொலைகளையும் ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அங்கத்தினரும்.

10.எரன் கெஸ்கின்(Erin Keskin)

துருக்கியில் பிறந்து அங்கு சட்டத்தரணியாகவும் மனித உரிமைகளுக்காகவும் இயங்கியவர். இஸ்தான்புல் மனித உரிமை அமைப்பின் துணைத் தலைவராக, அங்கு பாதுகாப்பு படையினரால் நடத்தப்பட்ட கற்பழிப்புகளுக்கும், பாலியல் வன்புணர்வுகளுக்கும், பாதுகாப்பு சிறைகளில் பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கும் நீதி தேடி துருக்கியினால் சிறைவைக்கப்பட்டு பின் விடுவிக்கப்பட்டவர்.



மேரி லாவ்லர்



ஒயஸ்ரின் திவேதார்

11. பிரான்ஸெஸ்கோ மாற்றோனே (Francessco Martone)



எரன் கெஸ்கின்

இத்தாலிய நாடாளுமன்றத்தின் முன்னாள் செனட்டர். அரசு சாரா அமைப்புகளில் பரந்த ஈடுபாடுகள் காட்டி பங்கு பற்றியவர்.

இவர்கள் தீர்ப்பாயத்தின் அயர்லாந்து விசாரணைகளை நடத்தியவர்கள். பின்னர் இவர்களில் சிலரோடு மேலும் சிலர் ஜேர்மனின் பிரேமனில் நடந்த விசாரணைகளை மேற்கொண்டனர்.

**436. இரண்டாவது அமர்வு பிரேமனில் (Bremen) ஏன் நடந்தது? அப்படியானால் அயர்லாந்தில் தரப்பட்ட தீர்வுகள் என்ன?**

அவற்றின் விவரத்தை நாளை பார்ப்போம்.

(வளரும்)



பிரான்ஸெஸ்கோ மாற்றோனே



டானியல் பியேற்ஸ்ரெயின்

# கோட்டாபயவின் கிளாஸ்கோ நகர் விஜயம் பற்றி பகிரங்க எச்சரிக்கை விடுக்கும் தேசிய பத்திரிகை

போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளில் ஈடுபட்டார் என நம்பத்தகுந்த முறையில் குற்றம்சாட்டப்பட்டுள்ள இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடுத்த வாரம் கிளாஸ்கோ நகருக்கு வருகிறார் என ஸ்கொட்லாந்து மக்களை எச்சரிக்கும் வகையிலான முழுப்பக்க விளம்பரம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை காலை வெளியான தி ஹெரால்டிலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

தி ஹெரால்ட் உலகின் மிக நீண்ட காலமாக இயங்கும் தேசிய பத்திரிகையாகும். உலகின் எட்டாவது பழைமையான தினசரி செய்தித் தாளாகவும் இது புகழ்பெற்றுள்ளது.

ஸ்கொட்லாந்தில் மிக அதிகளவில் விற்பனையாகும் இந்த பத்திரிகை, இணையத்திலும் செய்திகளை வெளியிடுகிறது.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வருகை தொடர்பில் ஸ்கொட்லாந்து மக்களை எச்சரிக்கும் வகையில் இந்தப் பத்திரிகையில் முழுப்பக்க விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.




# இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு ரஷ்ய இராணுவத்தால் மகத்தான வரவேற்பு!





ரஷ்யாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அந்நாட்டு இராணுவத்தினர் மகத்தான வரவேற்பு வழங்கியுள்ளனர்.

ரஷ்ய பாதுகாப்புப் படைகளின் தளபதி ஒலெக் சல்யுகோவின் அழைப்பின் பேரில் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அந்நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

அங்கு இராணுவ சம்பிரதாயங்களுக்கமைய ரஷ்ய பாதுகாப்பு அமைச்சுக்கு ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டதோடு, ரஷ்ய பாதுகாப்புப் படைகளின் தளபதி ஜெனரல் ஒலெக் சல்யுகோவுடனான உள்ளக பேச்சு ஒன்றும் இடம்பெற்றது.

இதன்போது, இருதரப்பு நலன்புரிச் செயற்பாடுகள், இலங்கை முப்படையினருக்கான பயிற்சி தளங்களை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல், இராணுவ கூட்டுப் பயிற்சிகள், இயந்திர மற்றும் பொறியியல் தொழில்நுட்பங்கள் பற்றிய அறிவு பரிமாற்றம் உள்ளிட்ட முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பிலான கருத்துப் பரிமாற்றங்களும் இடம்பெற்றன.

அத்துடன், இரு நாடுகளுக்குமிடையிலான நல்லெண்ணம் மற்றும் உறவுகளைப் பிரதிபலிக்கும் வகையில், ரஷ்யப் பாதுகாப்பு படைகளின் தளபதி ஜெனரல் ஒலெக் சல்யுகோவால் ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு சிறப்பு நினைவுப் பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

ஜெனரல் சவேந்திர சில்வா ரஷ்யாவில் தங்கியிருந்த நாள்களில் மாஸ்கோவின் மிகைலோவ்ஸ்கயாவில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த உயர் ஆயுதக் கட்டளை கல்லூரிக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்ததோடு, கல்லூரியின் தளபதியான மேஜர் ஜெனரல் ரோமன் பின்யுகோவ் ரஷ்யாவின் 4 ஆவது கார்ட்ஸ் டேங்க படைப்பிரிவின் தளபதி நரோ - போமின்க்ஸ் இராணுவ பீரங்கி கல்வியற் கல்லூரி, இராணுவ மருத்துவ கல்வியியற் கல்லூரி மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த இராணுவத் தளங்களுக்கும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பல பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

# இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட 400 வாகனங்கள் அரசுடமையாகும்?

இலங்கையில் வாகனங்கள் இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை மீறி 400 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

அந்த வாகனங்களை அரசுடமையாக்குவதா இல்லையா என்பது தொடர்பில் தகவல் கோர இலங்கை சுங்கப் பிரிவு, நிதி அமைச்சிடம் கடிதம் ஒன்று அனுப்பி வைத்துள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதம் அரசாங்கத்தால் வாகனங்களை இறக்குமதி செய்ய தடை செய்யப்பட்டது. அதன் பின்னர் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டமையால் அது சட்டத்தை மீறி செய்யப்பட்ட செயல் என சுங்க திணைக்களம் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய துறைமுகத்தில் அதிக சொகுசு வாகனங்கள் 3 ஆயிரத்துக்கும் அதிகளவில் உள்ளதென சுங்க ஊடக பிரிவு பேச்சாளர் சுதந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்தில் உள்ள வாகனங்களில் அதிகமானவைகள் அனுமதிபத்திர முறையின் கீழ் ஜப்பான் மற்றும் பிரித்தானியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

தடையை மீறி இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை அரசுடைமையாக்கி அரச நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும் என முன்னர் அரசாங்கம் அறிவித்திருந்தது. இந்த வாகனங்கள் துறைமுகத்தில் பழுதடைந்து போவதால் அதன் பெறுமதி நாளுக்கு நாள் குறைவடைகிறது என சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நிதி அமைச்சே இறுதித் தீர்மானம் எடுக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பேஸ்புக்கில் அறிமுகமான வெளிநாட்டுக் காதலி செய்த மோசடியால் காதலன் கொழும்பில் கைது!

கொழும்பில் பேஸ்புக் மூலம் அறிமுகமான காதலியின் வேண்டுகோளுக்கமைய 4 வங்கிக் கணக்குகளை ஆரம்பித்த காதலன் கைது செய்யப்பட்டுள்ளார்.

காதலி செய்த பாரிய மோசடி தொடர்பிலேயே காதலன் கைது செய்யப்பட்டுள்ளார் என மொரட்டுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் மத்துகம பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் என்று பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

வெளிநாட்டில் தொழில் பெற்று தருகிறேன் எனக் கூறி குறித்த வங்கிக் கணக்கு ஊடாக பணம் கொடுக்கல் வாங்கல் இடம் பெற்றுள்ள நிலையில் பணம் மோசடி செய்யப் பட்டுள்ளதாக பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கமைய, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான காதலன் மற்றும் அவரது காதலி 4 மாதங்களாக பேஸ்புக் ஊடாக அறிந்து கொண்டு காதல் தொடர்பு வைத்திருந்தனர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி காதலி தொடர்பில் எவ்விதத் தகவலும் அறியாத இந்த இளைஞர் இலங்கையில் உள்ள வங்கிகள் நான்கில் கணக்குகளை ஆரம்பித்துள்ளார். அத்துடன் தாம் இருவரும் இணைந்து வியாபாரம் ஒன்றை ஆரம்பிப்போம் என காதலி தெரிவித்தார் என இளைஞன் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அந்த கணக்குகளுக்கான ஏ.ரி.எம். அட்டை மற்றும் அனைத்து ஆவணங்களும் குரியர் சேவை ஊடாக காதலிக்கு கிடைக்கும் வகையிலான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த கணக்குகளின் அனைத்து நடவடிக்கைகளும் காதலியாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இளைஞர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த கணக்குகளில் மேற்கொள்ளப்படும் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களின் போதும் தனது கையடக்கத் தொலைபேசிக்கு குறுந்தகவல் மாத்திரமே கிடைப்பதாக அவர் கூறியுள்ளார். இந்த மோசடியுடன் தொடர்புடையதாக கூறப்படும் சந்தேக நபரான காதலியை தேடி பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# யொஹானி தமிழக இசைத்துறையில் பாடுகின்றமையை அனுமதிக்க முடியாது

## இந்து மக்கள் கட்சி தெரிவிப்பு

'மெனிகே மகே ஹிதே' என்ற பாடல் மூலம் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ள இலங்கைப் பாடகி யொஹானி டி சில்வா, தமிழக திரை இசைத்துறையில் பாடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என இந்து மக்கள் கட்சி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் மாநிலபொதுச்செயலாளர் ராம ரவிக்குமார் இதனைத் தெரிவித்துள்ளார். இணைய ஊடகம் ஒன்றில் இடம்பெற்ற விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

'மெனிகே மகே ஹிதே' என்ற பாடல் சர்வதேச ரீதியில் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ள நிலையில், அந்தப் பாடலை பாடிய யொஹானி டி சில்வா மிகவும் அறியப்படும் நபராக மாறியுள்ளார்.

இந்நிலையில், ஹாரிஸ் ஜெயராஜ் தனது படத்தில் பாடல் ஒன்றும் பாடும் வாய்ப்பை யொஹானிக்கு வழங்கியிருந்தார். கடந்த 6 ஆம் திகதி இந்தப் படத்தின் பாடலொன்று மும்பையில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

இதற்காக இலங்கையிலிருந்து மும்பை சென்றிருந்தார் பாடகி யொஹானி. அவரை வைத்து அந்தப் பாடலை ஹாரிஸ் ஜெயராஜ் பதிவு செய்துள்ளார். இந்த பாடல் பதிவின் போது, பாடலை எழுதிய மதன் கார்க்கியும் உடனிருந்தார்.

ஹாரிஸ், மதன் கார்க்கி, யொஹானி ஆகியோர் இருக்கும் படத்தை ஹாரிஸ் ஜெயராஜ் இணையத்தில் பகிர்ந்ததைத் தொடர்ந்து இந்த செய்தி வெளி உலகுக்குத் தெரிய வந்தது.

இந்த விடயம் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்து மக்கள் கட்சியின் மாநிலபொதுச்செயலாளர் ராம ரவிக்குமார் இவ்வாறு கூறியுள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

'மெனிகே மகே ஹிதே' பாடல் உலகம் முழுவதும் மிகவும் பிரபல்யம் அடைந்திருக்கலாம். அந்த காரணத்துக்காக அவர் தமிழக இசைத்துறையில் வந்து பாடுவதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

ஈழத்தின் இசைப்பாடகியாக இருந்த இசைப்பிரியா போன்றவர்கள் மிகவும் கொடூரமான முறையில் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

பல ஆயிரம் தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர், பல ஆலயங்கள் அழிக்கப்பட்டன. இதற்கெல்லாம் காரணமாக இருந்தவரின் மகள் தமிழக இசைத்துறையில் பாடுவதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நான் பலவீனமானவன் அல்லன்

# ஈஸ்டர் தாக்குதலைத் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்கமுடியாது!

### மைத்திரி அதிரடி



ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலை முன் கூட்டியே அறிந்து நாட்டை விட்டுவெளி யேறும் அளவிற்கு பலவீனமான நபர் நான் அல்லன், குண்டுத்தாக்குதல் சம் பவம் தொடர்பில் நான் ஆரம்பத்தில் அறிந் தேன் எனக் குறிப்பிடப்படுகின்றமை முற்றிலும் பொய்யானது.

ஏப்ரல் குண்டுத்தாக்குதல் சம்பவத்தை அரசாங்கம் என்ற ரீதியில் பொறுப்பேற் கத் தயார், தனிப்பட்ட முறையில் பொறுப் பேற்கத் தயாரில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனி யார் ஊடகத்துக்கு வழங்கிய நேர்காண லில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வரு மாறு -

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலை நான் முன்கூட்டியதாக அறிந்திருந்தேன் என வும், குண்டுத்தாக்குதலைத் தடுக்காமல் நாட்டை விட்டு வெளியேறினேன் எனவும் குறிப்பிடும் கருத்துக்கள் முற்றிலும் தவறா னவை.

எனது அரசியல் வரலாற்றில் ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தை மறக்க முடியாத ஒரு வேதனைக்குரிய சம்பவமாகவே கருதுகிறேன்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்ப வத்தால் பெரும் நெருக்கடிகளையும், தனிப்பட்ட மன உளைச்சலையும் இது வரையில் எதிர்கொண்டுள்ளேன்.

குண்டுத்தாக்குதலை அறிந்து நாட்டை விட்டு வெளியேறும் அளவிற்கு நான் ஒன்றும் பலவீனமான நபர் அல்லன்.

குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கான பொறுப்பை அரசாங்கம் என்ற ரீதியில் பொறுப்பேற்க தயார், தனிப்பட்ட முறை யில் பொறுப்பேற்கத் தயாரில்லை.

2019 ஏப்ரல் 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் சிங்கப்பூரில் இருந்தேன். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் இடம்பெற் றதை தொடர்ந்து அரசாங்கத்தின் உயர் மட்ட தரப்பினரும், பாதுகாப்பு தரப்பின ரும் எனக்கு அறிவிக்கவில்லை.

முகப்பு புத்தகம் ஊடாகவே அறிந்து கொண்டேன். அதிகாரிகள் தங்களின் பொறுப்பை முறையாக செயற்படுத்த வில்லை. - என்றார்.

## சுற்றிவளைப்புகளில் நால்வர் கைதாகினர்

விசேட சுற்றிவளைப்புகளில் போதைப்பொருள் மற் றும் துப்பாக்கியுடன் 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

காலி, எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏன்கந் துர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், உள்நாட்டுத் துப்பாக்கியுடன் கனேகொட பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, பொரளை, மகசின் வீதி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், 5 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயினுடன் பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை வடக்கு, சமகிபுர சந்திக்கு அருகில் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், 20 கிராம் 400 மில்லி கிராம் ஹெரோயினுடன் வாத்துவ பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கெஸ்பேவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், 02 கிலோகிராம் கேரள கஞ்சாடவுன் இராஜகிரிய பிரதேசத் தைச் சேர்ந்த 54 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள் ளார்.

குறித்த பகுதியில் பயணித்த லொறியொன்றை வழிமறித்துச் சோதனையிட்டபோதே கேரள கஞ்சாவு டன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## எதிர்க்கட்சித் தலைவர் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றி மக்களின் எதிர்காலத்தை அழிக்கத் தயாராகின்றார்!

### மதுர விதானகே எம்.பி. சாட்டை




சேதன பசளை விவகாரத்தை அடிப்படையாகக்கொண்டு குறுகிய அரசியல் இலாபம் தேடுவதை எதிர்த் தரப்பினர் தவிர்த்துக்கொள்ள வேண் டும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ளவும் மக்களின் எதிர்காலத்தை அழிக்கவும் தயாராக வுள் ளார் என பொதுஜன பெரமுன வின் நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரி யாலயத்தில் இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் -

விவசாயிகளுக்கு இரசாயன உரத்தைப் பெற்றுக்கொடுக்க முன் நிற்பதாகவும், நாட்டில் உரத் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப் பிட்டுக்கொள்கிறார்.

குறுகிய அரசியல் நோக்கத்துக் காக நாட்டு மக்களின் எதிர்காலத்தை அழிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் பகிரங்கமாக குறிப்பிட்டுக்கொள்கிறார்.

அரசியல் நோக்கத்தை கருத்திற் கொண்டு சேதன பசளை திட்டம் அறிமுகப்படுத்தப்படவில்லை. என் பதை முதலில் நாட்டு மக்களும், எதிர்க்கட்சியினரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

விவசாயிகள் இரசாயன உரத்தை பயன்படுத்தி பெற்றுக்கொள்ளும் இலாபத்தை காட்டிலும் பன்மடங்கு பணத்தை தங்களின் சுகாதார தேவைக்காக செலவிடுகிறார்கள்.

உரம் கோரி விவசாயிகள் போராட் டத்தில் ஈடுபடுகின்றமை பயனற் றது. பெரும்போக விவசாய நடவடிக் கைகளுக்குத் தேவையான சேதன பசளை உரம் விவசாயிகளுக்கு முழு மையாக வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் அவர்கள் விவசாயத் தில் ஈடுபடாமல், அரசியல்வாதி களின் நோக்கத்துக்கமைய போராட் டத்தில் ஈடுபடுகின்றமை கவலைக்கு ரியது.

சேதன பசளையை பயன்படுத்தி பெற்றுக்கொள்ளப்படும் நெல்லுக் கான தற்போதைய உத்தரவாத விலையை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அத்துடன் விவ சாயத்தில் முழுமையான விளைச்சல் கிடைக்காவிட்டால் நட்டஈடு வழங்க வும் அரசாங்கம் தயாராகவுள்ளது.

சேதன பசளை விவகாரத்தைக் கொண்டு அரசியல் இலாபம் தேடிக் கொள்வதை எதிர்த்தரப்பினர் தவிர்த் துக்கொள்ள வேண்டும். சேதன பசளை தொடர்பில் விவசாயிகள் மத் தியில் தவறான நிலைப்பாடு காணப் படுகிறது. - என்றார்.

## தேயிலை உற்பத்திக்குத் தேவையான இரசாயன உரம் நவம்பர் மாதம் வரும்

### அமைச்சர் ரமேஷ் பத்திரண நம்பிக்கை



தேயிலை உற்பத்திக்குத் தேவையான இரசாயன உரம் நவம்பர் மாத இறுதி யில் நாட்டை வந்தடைய வுள்ளது.

இலங்கையில் சேதன உர உற்பத்தி நாட்டுக்குத் தேவையானளவை அண் மிக்கும் வரை தேயிலை தொழிற்துறைக்குத் தேவையான நைட்ரஜன் உரத்தை இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச் சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்தி ரண தெரிவித்தார். வாராந்த அமைச்சரவை தீர்மானங் களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இலங்கையில் சேதன உர உற்பத்தி நாட்டுக்குத் தேவையானளவை அண்மிக்கும் வரை தேயிலை தொழிற்துறைக்குத் தேவையான நைட்ரஜன் உரத்தை இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. குறித்த உரத்தொகை நவம்பர் மாத இறுதியில் நாட்டை வந்தடையும்.

நாட்டினதும் நாட்டின் எதிர்காலம் தொடர்பிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்துள்ள பசுமை விவசாயம் குறித்த தீர்மானம் மிகவும் முக்கியத்துவ முடையதாகும்.

எனினும் அதனை நடைமுறைப்படுத்தும்போது சில சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளை, நாட்டில் சேதன உரத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கு வோம். - என்றார்.

## யுகதனவி மின் உற்பத்தி நிலைய ஒப்பந்தத்தை இரத்தாக்க வலியுறுத்தி ஜே.வி.பி. மனு தாக்கல்

கெரவலப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் அமெரிக்க நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட் டுள்ள ஒப்பந்தம் சட்டவிரோதமானது. எனவே அதனை ரத்து செய்யுமாறு குறிப்பிட்டு ஜே.வி.பி. கடந்த செவ்வாய் கிழமை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

இதன் போது ஜே.வி.பியின் சுனில் ஹந்துனெத்தி ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் -

யுகதனவி வேலைத்திட்ட ஒப்பந்தத்தின் உள்ளடக்கங் களை அறிந்து கொள்ளக் கூடிய உரிமை நாட்டு மக்க ளுக்குக் காணப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் நாட்டின் இறையாண்மையிலும், சுயாதீனத்தன்மை யிலும் தலையிடுவதற்கு அமெரிக்காவிற்கு வாய்ப்பளிக் கப்படும் என்பதால் இதனை சட்ட ரீதியாக ரத்துச் செய்ய வேண்டும்.

யுகதனவி வேலைத்திட்டத்தின் மூலம் இலங்கைக்கு எரிவாயுவை விநியோகிக்கும் அதிகாரம் அமெரிக்க நிறு வனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்காக கையெழுத் திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தை ரத்து செய்யுமாறு வலியு றுத்தியே நாம் உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய் துள்ளோம். காரணம் இவ்வாறான ஒப்பந்தங்கள் நாட் டின் எதிர்காலத்துக்குப் பாரிய அச்சுறுத்தலாகும்.

மின்சக்தி என்பது நாட்டின் பாதுகாப்பில் ஒரு தொகுதி யாகும். இலங்கையின் வலு சக்தியுடன் தொடர்புடைய எந்த நாட்டுக்கு வழங்கப்படுகின்றதோ, அந்த நாட்டுக்கு இலங்கையின் சுயாதீனத்தன்மையிலும், இறை யாண்மையிலும் தலையிட முடியும்.

அமெரிக்காவுடனான இந்த ஒப்பந்தத்தின் காரண மாக இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளும் இதே போன்று வெவ்வேறு வேலைத்திட்டங்களில் தலையிடு கின்றன.

எனவே இது தொடர்பில் சட்ட ரீதியில் இந்த ஒப்பந்



தத்தை ரத்து செய்ய வேண்டும் என்பதையே நாம் நீதிமன்றத்திடம் எதிர்பார்க்கின்றோம். இந்த ஒப்பந்தத் தின் பின்னணியில் பாரிய நிதி மோசடி மற்றும் மறை முக கொடுக்கல் வாங்கல்கள் காணப்படுகின்றன. எனவே இந்த வேலைத்திட்டம் நிறுத்தப்பட வேண்டும்.

இதன் காரணமாக தற்போது அரசாங்கத்துக்குள்ளும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. எதிர்க்கட்சிகள் மாத்தி ரமன்றி ஆளுந்தரப்பின் சகல பங்காளிக் கட்சிகளும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. இந்த எதிர்ப்புக்கள் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிரானதா, கோட்டாபய ராஜபக்ஷ வுக்கு எதிரானதா என்பது எமக்கு அவசியமற்றது. எரிபொருள் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் இதற்கு எதிர்ப்பை வெளியிடுகின்றார்.

இது தொடர்பான உண்மைகளை அறிந்து கொள்ளக் கூடிய உரிமை நாட்டு மக்களுக்கு காணப்படுகிறது. ஜனாதிபதியும் நிதியமைச்சரும் அமெரிக்க பிரஜைகளாக அந்நாட்டுக்கு சார்பாக செயற்பட்டு இலங்கையின் எதிர் காலத்தை கேள்விக்குள்ளாக்க முயற்சிக்கின்றனர். - என்றார்.

# மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்த நாடாளுமன்றில் ஆக்கபூர்வமான ஏற்பாடுகள் இல்லை

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை எத்தேர்தல் முறையிலாவது நடத்துவதற்கான தீர்மானத்தை நாடாளுமன்ற மட்டத்தில் முன்னெடுக்குமாறு அரசாங்கத்திடம் தொடர்ந்து வலியுறுத்துகிறோம்.

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு நாடாளுமன்றத்தில் ஆக்கப்பூர்வமாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றனவா, என்பதைக் கருத முடியவில்லை. என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல்புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்ற தேர்தலை எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்கு முன்னர் நடத்துவதற்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தயாராவுள்ளது எனவும் தெரிவித்தார்.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்குறிப்பிடுகையில் –

மாகாண சபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சட்ட சிக்கல் முறைமை காரணமாக மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல் முறைமை 50 வீதம் தொகுதி முறைமை மற்றும் 50 வீதம் விகிதாசார முறைமை என மாற்றியமைக்கப்பட்டது. புதிய தேர்தல் முறைமை மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் அப்போது நிறைவேற்றப்பட்டது.

எனினும் புதிய தேர்தல் முறைமைக்கு அமைய உருவாக்கப்பட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றில் ஏகமனதாக நிராகரிக்கப்பட்டது. எல்லை நிர்யண அறிக்கை நிராகரிக்கப்பட்டதை தொடர்ந்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எல்லை நிர்ணய மீளாய்வு குழு நியமிக்கப்பட்டு, மூன்று மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டது. இருப்பினும் மீளாய்வு குழுவினர் எல்லை நிர்ணய குழு அறிக்கை தொடர்பில் மீளாய்வு அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை இல்லாத பட்சத்தில் புதிய தேர்தல் முறைமைக்கு அமைய மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாத நெருக்கடியான சட்ட சிக்கல் ஏற்பட்டுள்ளது. எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கை திருத்தம்செய்யப்பட வேண்டும். ஆனால் இதுவரையில் அந்த அறிக்கை தொடர்பில் அவதானம் செலுத்தப்படவில்லை.

ஆகவே, மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையில் இம்முறை மாத்திரம் நடத்தி பிற்பட்ட காலத்தில் புதிய தேர்தல் முறைமையை அப்போதைய சூழலுக்கு அமைய திருத்தியமைக்க முடியும் என ஆரம்பத்தில் குறிப்பிட்டோம். தேர்தல் முறைமையை மாற்றியமைக்கும் நடவடிக்கையை நாடாளுமன்றம் முன்னெடுக்க வேண்டும்.

மாகாணசபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சட்ட சிக்கல்களுக்கு நாடாளுமன்றத்தின் ஊடாகத் தீர்வைக் காணாமல் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது. மாகாண சபைத் தேர்தல் தொடர்ந்து பிற்போடப்படுகின்றமை ஜனநாயக கொள்கைக்கு முரணானது. ஆகவே எத்தேர்தல் முறையிலாவது மாகாண சபைத் தேர்தலை நடத்தும் சூழலை ஏற்படுத்திக்கொடுக்குமாறு அரசாங்கத்திடம் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளோம். மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கான ஆக்கப்பூர்வ நடவடிக்கைகள் நாடாளுமன்ற மட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றனவா என்பது சந்தேகத்திற்குரியது.

உள்ளூராட்சிமன்றங்களின் பதவிக் காலம் எதிர்வரும் பெப்ரவரி மாதத்துடன் நிறைவுபெறும். உள்ளூராட்சி மன்ற தேர்தலின் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் ஆறு மாதத்துக்குள் தேர்தலை நடத்தவும், அல்லது உள்ளூராட்சிமன்றங்களின் பதவிக் காலம் முடிவடையும் தினத்திலிருந்து ஒரு வருட காலத்துக்கு தேர்தலை பிற்போடும் அதிகாரம் மாநகரசபை, நகர சபை மற்றும் பிரதேச சபை தேர்தல் சட்டங்களின் ஊடாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதில் எவ்வித சட்ட சிக்கலும் கிடையாது, சுகாதாரப் பிரச்சினைகள் மாத்திரம் காணப்படுகின்றன. அரசாங்கம் அனுமதி வழங்கினால் எதிர்வரும் பெப்ரவரி மாதத்திற்கு முன்னர் சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக் குழு தயாராகவுள்ளது. – என்றார்.

# இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் பாரதூரமான பிரச்சினைகள்!

## நாடாளுமன்றில் ஹக்கீம் தெரிவிப்பு

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் அமைப்பு செயற்பாடுகள் மற்றும் அனைத்து ஒழுங்கமைப்புகள் என்பன தொடர்பில் பாரதூரமான பிரச்சினைகளும், ஒழுங்கீனங்களும் இருந்து வந்திருக்கின்றன.

– இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

கண்டி மாவட்டத்தின் எனது சக நாடாளுமன்ற உறுப்பினரான விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இவ்வாறான சில சிக்கலான விடயங்களை முன்வைப்பதில் வெகு சமர்த்தர். ஆனால், இந்த நாள்களிலும், அண்மைய நாடாளுமன்ற வரலாற்றிலும் எரிக்கப்பட்ட கொடும்பாவிகளில் அநேகமானவை அவருடையவை என்பது துரதிர்ஷ்டவசமானது. நாடெங்கிலும் விவசாயிகள் அவரது கொடும்பாவியை எரித்த வண்ணமேயுள்ளனர். அது இப்பொழுது பேசுபொருளாகவே மாறியுள்ளது.

அவ்வாறிருக்க, இன்று நாட்டில் தலைதூக்கியுள்ள இரசாயனப் பசளை மற்றும் சேதனப் பசளை என்ற பிரச்சினையை ஒருபுறம் வைத்துவிட்டு, நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டவாறு, அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கை மற்றும் அதன் மீது சபாநாயகர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை என்பன முக்கியமானவை. அவ்வாறான அறிக்கை நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டவுடனேயே அது நாடாளுமன்றத்துக்கு உரித்தாகி விடுகின்றது.

நடவடிக்கை எடுப்பதற்காக அது முன்னரும் ஒருமுறை அனுப்பப்பட்டிருந்தது. அது பற்றி பிரஸ்தாப குழுவால் விதந்துரைக்கப்பட்டவாறு அது தொடர்பிலான முன்னெடுப்பை சட்ட மா அதிபர் திணைக்களம், லஞ்ச ஊழல்கள் ஆணைக்குழு, குற்றப் புலனாய்வுத் துறை என்பன மேற்கொள்வதைக் கண்காணிக்க வேண்டியது சபாநாயகரின் பொறுப்பாகும். ஆகையால், அதன் மீது கவனம் செலுத்தப்படும் என நம்புகிறேன்.

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் தொடர்பான குறித்த அறிக்கை பற்றிய விடயம் சுவாரஷ்யமானதாகும். இந்த விவகாரம் பற்றிய விசாரணையைப் பொறுத்தமட்டில் முன்னர் இந்த நிறுவனத்துக்கு அமைச்சராக நான் இரு முறை பதவி வகித்துள்ளேன். 2000ஆம் 2001 ஆம் ஆண்டுகளில் நான் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சராக இருந்த காலத்தில் இந்நிறுவனம் எனது அமைச்சின் கீழ் இருந்து வந்தது. அதன் பிறகு 2019ஆம் ஆண்டில் நான் உயர் கல்விக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்தபோதும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனமும், மஹபொல நம்பிக்கை நிதியமும் எனது அமைச்சின் பொறுப்பிலேயே இருந்து வந்தன.

அதன்போது, எனது அமைச்சின் செயலாளராக இருந்த பிரியந்த மாயாதுன்னே எனது ஒப்பத்துடன் என் ஊடாக பிரஸ்தாப இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தை உயர் கல்வி அமைச்சின் பொறுப்பிலிருந்து விடுவிப்பதற்கான ஓர் அமைச்சரவை பத்திரத்தைத் தயாரித்தளித்தார்.

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் அமைப்பு செயற்பாடுகள் மற்றும் அனைத்து ஒழுங்கமைப்புகள் என்பன தொடர்பில் பாரதூரமான பிரச்சினைகளும், ஒழுங்கீனங்களும் இருந்து வந்திருக்கின்றன. கோப் குழுவிற்கு முறையிட்டதையடுத்து, இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்துக்கும், மஹபொல நம்பிக்கை நிதியத்துக்குமான தொடர்பு பற்றி இங்கு கேள்வியெழுப்பப்படுகின்றது. பிரஸ்தாப குழு நாடாளுமன்றத்துக்கு அறிக்கையிட்டதைத் தொடர்ந்து இப்போதைய நிர்வாகம், இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம், மஹபொல நம்பிக்கை நிதியத்திற்கு எந்த விதத்திலும் உரியதல்லவென கேள்வியெழுப்புகின்றது. ஆனால், அந்த நிறுவனத்துக்கான கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ள காணியை மஹபொல நம்பிக்கை நிதியம் வாடகைக்கு விட்டிருந்துள்ளது.

பல விதங்களில் இந்த விவகாரம் கையாளப்படுகின்றது. அமைச்சரவைப் பத்திரம் பிரஸ்தாப நிறுவனத்தை மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பகுதியாக செயற்படுவதற்கான நோக்கத்துடனேயே முன்வைக்கப்பட்டதாக அதன் தற்போதைய நிர்வாகம் கருதுகின்றது.

முன்னதாக, 1998, 1999,ஆம் ஆண்டுகளிலும், அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை தகவல் தொழில் நுட்ப நிறுவனத்தின் நிர்வாகம், அதனை ஆதாயமீட்டும் நோக்கமற்ற ஓர் உத்தரவாதமளிக்கப்பட்ட கம்பனியாகக் குறிப்பிடுகின்றது. நிதியமைச்சின் அவதானிப்பு அந்த நிறுவனத்தை ஏற்படுத்துவதற்கு எதிரானதாக இருந்ததால், அரச நிதி ஒதுக்கீட்டிலிருந்து அதனைச் செய்ய முடியவில்லை. சில தனி நபர்கள் அதற்கான முதலீடுகளை மேற்கொண்டனர்.

எங்களது அறிக்கையில் சில விடயங்களைக் குறிப்பிட்டுள்ளோம். நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஓர் அமைச்சரவை உபகுழு இந்த விவகாரம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்டிருந்தது.

உலகில் பிரசித்தம் வாய்ந்த ஹாவர்ட், யேல் ஸ்டன் போர்ட் போன்ற பல்கலைக்கழகங்கள் கூட, வருமான மீட்டும் நோக்கமின்றி, நிதியங்களினூடாகவே ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அவற்றை நல்ல முன்னுதாரணமாகக் கொள்வது ஒருவகையில் வரவேற்கத்தக்கதாகும்.

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களிலிருந்து ஆண்டுதோறும் முன்னர் 200 மாணவர்களே தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகளாக வெளியேறினர். இப்போது 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் அந்த இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து கற்று வெளியேறுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த எண்ணிக்கை நாட்டின் முழு தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகளின் மொத்த எண்ணிக்கையில் அரைவாசியாகும்.

ஆகையால், இது மிக முக்கியமானதொரு நிறுவனமாகும். இதன் எதிர்காலச் செயற்பாடுகள், அமைப்பு திட்டமிடல் என்பனவும் அது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்றதா, அரச பல்கலைக் கழகமா அல்லது, அரச பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமா? அல்லது அதனை ஓர் அரச சார்பற்ற பல்கலைக்கழகமாகக் கொண்டு செல்ல அனுமதிப்பதா? என்பன பற்றியெல்லாம் கவனம் செலுத்தப்பட வேண்டும். அல்லது கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தைப் போல பட்டம் வழங்கும் தகுதி வாய்ந்த நிறுவனமாக ஏற்றுக் கொள்வதா என்பது பற்றியும் சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டும்.

சட்ட மா அதிபர் இந்த நிறுவனம் பற்றி எல்லா ஆவணங்களையும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்திருந்தார். எங்களது கோப் அறிக்கையின் 21 ஆம் பக்கத்தில் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளோம். முக்கியமான ஆவணங்கள் பரிசீலிக்கப்படாததாலேயே பல பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால் அமைச்சரவை உப குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிக்க முடியாது போயுள்ளது.

பிரஸ்தாப நிறுவனத்தின் தரப்பில் அவர்களது சட்டத்தரணிகள் மூலம் கோப் குழுவின் முன் தாம் தோன்ற வேண்டிய அவசியமில்லை என அறிவித்துள்ளனர். அவர்களின் நிறுவனத்தின் குறைகளை ஆராய்வதற்கு குறிப்பாக சட்ட மா அதிபருக்கு அதிகாரமில்லை என அவர்கள் கூறுகின்றனர்.

அவர்கள் கடிதம் எழுதிக் கொண்டிருக்காமல் கோப் குழுவின் முன்னிலையில் வந்து அவர்களது பக்க நியாயங்களைக் கூறலாம். அவர்கள் உரிய ஆதாரங்களை முன்வைத்து நியாயமான காரணங்களை எங்களிடம் கூறினால் சிலவேளை நாங்கள் அவர்களைக் குறை காணாமல் விடலாம். கணக்காளர் நாயகம் அறிக்கையிடுவதையும் அவர்கள் ஆட்சேபிக்கின்றனர்.

லிட்ரோ காஸ், லாப் காஸ் நிறுவனத்தாரும் இவ்வாறான கடிதங்களை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழுவிற்கு அனுப்புகின்றனர். எங்களுக்கு அவற்றை விசாரிக்க முடியாது என்கின்றனர். அவர்கள் நேரில் வந்து எங்களிடம் அவர்களது நிலைப்பாட்டைக் கூறலாம்.

அதைவிடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு போய் அவர்கள் தடையுத்தரவை பெற முயற்சித்தாலும், எங்களது செயற்பாட்டை அவர்களால் தடுத்து நிறுத்தி விட முடியாது. நாடாளுமன்றத்துக்கு அதற்கான அதிகாரமுள்ளது.

அமைச்சர் மஹிந்தானந்தா அளுத்கமகே கூறியவாறும் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தவாறும் சபாநாயக்கருக்கு அதிகாரம் இருக்கின்றது. இப்பொழுது இவை நாடாளுமன்றத்துக்கு உரிய ஆவணங்களாகும். ஆகையால், அவை தொடர்பில் சபாநாயகர் உரிய தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகின்றேன். – என்றார்.

## ஒரே நாடு - ஒரே சட்டத்தைச் செயற்படுத்த

# ஞானசார தேரர் தலைமையில் ஜனாதிபதி செயலணி நியமனம்

## தமிழர்கள் எவரும் இல்லை; கோட்டாபயவின் தீர்மானத்துக்குச் சுமந்திரன் கடும் கண்டனம்



**அரசமைப்பின் 33ஆவது உறுப்புரிமையின் பிரகாரம் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய இலங்கையினுள் 'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்பதை செயற்படுத்தும் சட்ட வரைபைத் தயாரிக்க 13 பேரை உள்ளடக்கிய விசேட ஜனாதிபதி செயலணியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உருவாக்கியுள்ளார்.**



'ஒரே நாடு - ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் தலைவராக பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கடகொட அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், செயலாளராக ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஜீவந்தி சேனாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் தயானந்த பண்டார, பேராசிரியர் சாந்திநந்தன விஜயபண்டார,பேராசிரியர் சுமேத சிறிவர்தன, என்.ஜி.வ சுஜீவ பண்டிதரத்ன, சட்டத்தரணி இரேஷ் செனெவிரத்ன, சட்டத்தரணி சஞ்சய மாரம்பே, எரந்த நவரத்ன, பாணி வேவல, மௌலவி மொஹமட் (காலி உலமா சபை), விரிவுரையாளர் மொஹொமட் இந்திகாப், கலீல் ரஹூமான், அஸீஸ் நிசார்தீன் ஆகியோர் செயலணியில் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். செயலணியில் தமிழ் உறுப்பினர்கள் எவரும் உள்ளடக்கப்படாமை கவனிக்கத்தக்கது.

செயலணியின் செயற்பாடுகளுக்கு அனைத்து அரச உத்தியோகத்தர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளமையுடன், பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான வாறு விடயங்களை விசாரிப்பதற்கும், ஆலோசனை வழங்குவதற்கும் செயல ணிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

செயலணியின் உறுப்பினர்கள் மாதத்துக்கொரு முறை ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கும், முழுமையான, இறுதி அறிக்கையை 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தச் செயலணியை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், ஜனாதிபதியின் இந்தத் தீர்மானத்தை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் சிறைத்தண்டணை அனுபவித்த ஞானசார தேரருக்கு 'ஒரே நாடு - ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியில் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளமை வேடிக்கையானது எனவும் சுமந்திரன் எம்.பி. சாடியுள்ளார்.

இந்தச் செயலணியின் செயற்பாடுகளை ஜனாதிபதி உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் சுமந்திரன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

## ஜனாதிபதி செயலணியில் இன சமத்துவம் இல்லை!

### முன்னாள் சபாநாயகர் கரு குற்றச்சாட்டு

'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்பதற்கான ஜனாதிபதி செயலணியில் சமத்துவம் பேணப்படவில்லைஎனச்சுட்டிக்காட்டியுள்ள முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, ஏனைய இனத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பெண்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆகவே, இந்தக் குழுவின் பன்முகத் தன்மையைப் பேணுவதற்காக மக்கள் கருத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியதும் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விளக்கமளித்து வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒரே நாடு – ஒரே சட்டம் என்பதற்கான ஜனாதிபதி செயலணிக்கான வர்த்த மானி அறிக்கைக்கு அமைவாக, நபர்கள் சமமான நிலையில் மதிக்கப்படுகிறார்கள் என்பதை அந்தக் குழுவே முதலில் உறுதி செய்யவேண்டும்.

ஆனால், இந்தக் குழுவில் சகல இனப் பிரதிநிதிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளோ, அல்லது பெண்களோ உள்வாங் கப்படவில்லைஎன்பதுகுறிப்பிடத்தக்கது.

ஆகவே, இதன் உள்ளக பன்முகத் தன்மையைப் பாதுகாப்பதற்காகப் பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும் - என்று குறிப்பிட்டுள்ளார்.

## சிங்களக் குடியேற்றத்துக்கு எதிராக வவுனியாவில் வெள்ளி ஆர்ப்பாட்டம்

**(வவுனியா நிருபர்)**

வவுனியா வடக்கில் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் செயற்பாட்டுக்கு எதிராக எதிர்வரும் வெள்ளிக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

வவுனியா, பழைய பஸ் நிலையம் முன்பாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் குறித்த கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

மதவாச்சியில் உள்ள 1,330 சிங்களக் குடும்பங்களை வவுனியா வடக்கு பிரிவில் இணைத்து இன விகிதாசாரத்தை மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் நிலத்தையும், இருப்பையும் காக்க தமிழ் மக்களை இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிணையுமாறும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி யின் வவுனியாமாவட்டஅமைப்பாளர் தெரிவித்துள்ளார். (100)

## மைத்திரி - மனோ திடீர் சந்திப்பு; தேர்தல் முறைமை குறித்து பேச்சு



முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவை தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் சந்தித்துள்ளார்.

தேர்தல் முறைமை தொடர்பில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை அறிவதற்காகவும், அதுபற்றி கலந்துரையாடவுமே மைத்திரிபாலவை தான் சந்தித்தேன் என மனோ கணேசன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.

இது பற்றி தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி.மேலும் கூறியதாவது:-

தேர்தல் நடக்கப் போகின்றதோ, இல்லையோ தெரியாது. ஆனால், தேர்தல் முறைமையைப் பூரணமாக மாற்றி விகிதாசார முறைமையை ஒழித்து, கலப்புமுறைமையைக்கொண்டுவந்து, சிறிய கட்சிகளின் பிரதிநிதித்துவங்களுக்கு பாரிய பாதிப்பைஏற்படுத்தி, இந்நாட்டில் இரண்டு கட்சி ஆட்சியை நிலைபெற செய்ய அரசு கங்கணம் கட்டிச் செயற்படுகின்றது.

இதற்கு உறுதுணையாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கலப்பு முறைமையை ஆதரிக்கின்றது எனத் தெரிவுக்குழு தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர் தன தெரிவுக்குழுவில் அறிவித்துள்ளார்.

இது ஏற்கனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் அக் கட்சியின் பொது செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் என்னிடம் நேரடியாக அறிவித்திருந்த நிலைப்பாட் டுக்கு முரணாக உள்ளது என நான் இந்தச் சந்திப்பின்போது முன்னாள் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறினேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே இன்று நாட்டில் மூன்றாவது பெரிய கட்சியாக இருக்கின்றது. இந்நிலையில், உத்தேச கலப்புத் தேர்தல் முறைமை தமிழ், முஸ்லிம் கட்சிகளை மட்டுமல்ல, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சி களையும் அழித்து விடும் என்று மைத்திரிபாலவிடம் நான் எடுத்துக் கூறினேன்.

தற்போது தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து ஜே.வி.பி., ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளும் விகிதாசார முறைமையையே ஆதரிக்கின்றன. கலப்பு முறைமையை எதிர்க்கின்றன.



கலந்துரையாடலின்போது, எமது நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன, தெரிவுக்குழு தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தன கூறுவது பிழை. அங்கே எமது கட்சியின் நிலைப்பாடு சரிவரக் கூறப்படவில்லை. விரைவில் நமது கட்சியின் அதிகாரபூர்வ குழு அங்கே வந்து எமது நிலைப்பாட்டை அறிவிக்கும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கலப்பு முறைமையை ஏற்றுக் கொள்ளாது. நாம் விகிதாசார முறைமையையே ஆதரிக்கின்றோம். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கலப்பு முறைமை இருக்கலாம். ஆனால், மாகாண சபை, நாடாளுமன்றம் ஆகியவற்றுக்கு விகிதாசார முறைமையே சரியானது. இதுவே எங்கள் நிலைப்பாடு என்று மைத்திரிபால கூறினார் – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனப்படுகொலையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'ஜனாதிபதி ஞானசார தேரரின் தலைமைத்துவத்தின் கீழ் ஒரு ஜனாபதி செயலணியை உருவாக்கியுள்ளார். அவருடைய நோக்கு ஒரு நாடு ஒரு சட்டம் என்பது இது பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?' என்ற கேள்விக்கு ஊடகங்களிடம் பதிலளிக்கும்போதே விக்னேஸ்வரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி பல்வேறு குற்றவாளிகளை இதுவரை தனது அதிகாரங்களைப் பாவித்து சிறைகளில் இருந்து வெளிக்கொண்டு வந்து மன்னிப்பு அளித்துள்ளார். உதாரணத்திற்கு இரண்டு நீதிமன்றங்களால் கொலைக் குற்றவாளியாக காணப்பட்ட இரத்நாயக்க என்ற இராணுவ வீரர் அவர்களுள் ஒருவர், கொலைக்குற்றவாளியாகக் காணப்பட்ட துமிந்த சில்வா மற்றொருவர்.

அண்மையில் கரணகொட என்ற முன்னாள் கடற்படைத் தளபதிக்கு எதிராக இருந்த குற்றச்சாட்டுக்களை கைவாங்கி அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

போர்க்காலத்தின் போது பல குற்றங்களைப் புரிந்த இராணுவ அதிகாரிகள் ஓய்வுபெற்ற பின் அவர்களைக் கொண்டு வந்து அவர்களுக்கு அரச உயர்பதவிகள் கொடுத்துள்ளார். ஆகவே, குற்றஞ்சாட்டப்பட்டு குற்றவாளியாகக் கணிக்கப்பட்டு சிறையில் இருந்த ஞானசார தேரரை தற்போது தமது ஜனாதிபதி செயலணிக்கு தலைவராக்கியமை எனக்கு வியப்பைத் தரவில்லை. அவருடைய அந்தச் செயலணியில் அங்கம் பெறும் அங்கத்தவர்கள் பெரும்பான்மை சிங்களவர்களும் ஒரு சில முஸ்லிம்களும் ஆவர்.

வடக்கு மாகாணத் தமிழ் மக்களுக்கு என்று தேசவழமை என்ற ஒரு சட்டம் டச்சுக் காலத்தில் இருந்து சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது. 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்று கூறும்போது தற்போது வலுவில் இருக்கும் றோம டச்சுச் சட்டம், ஆங்கிலச் சட்டம், கண்டியச் சட்டம், தேசவழமைச் சட்டம், முஸ்லிம் சட்டம் ஆகியவற்றைப் புறக்கணித்து இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடாகக் கணித்து ஒற்றைச் சட்டத்தைக் கொண்டு வரவே இந்தச் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.

'ஒரு நாடு ஒரு சட்டம்' என்று கூறும் பொழுது இந்த நாட்டில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை சிங்கள மாகாணங்களுடன் சேர்த்து அவை சிங்கள பௌத்தத்திற்குள் அடங்கியவை என்று எடுத்துக் காட்டவே இந்த இன ரீதியான செயலணி உருவாக்கப்பட்டுள்ளது என்று நான் நம்புகின்றேன்.

கண்டியத் திருமணங்களில் ஃபின்ன, ஃதீக என்ற இரு விதமான திருமணங்கள் இருக்கின்றன. ஒன்றில் கணவனுடன் போய் மனைவி வாழ்வது மற்றையது மனைவியின் முல்கெதரவில் சென்று கணவன் வாழ்வது.

இவையெல்லாம் பாரம்பரியமாக கண்டிய மக்கள் ஏற்றுக்கொண்ட திருமண முறைகள். இவற்றையெல்லாம் ருகுணரட்டவில் (தென்மாகாணம்) இருந்து வரும் கோட்டாபய மாற்றியமைக்க இருக்கின்றாரா?

கண்டிய மக்களின் தலைவர்களுடன் கண்டிய சட்டத்தை நீக்கப் போவதாகக் கூறி அவர்களின் சம்மதத்தை ஏற்றுக் கொண்டுள்ளாரா?

முஸ்லிம் மக்களுடன் இதுபற்றிப் பேசி முஸ்லிம் சட்டத்தைக் கைவிட முஸ்லிம் மக்கள் ஆயத்தமா என்று அவர்களுடன் கலந்துரையாடியிருக்கின்றாரா? தமிழ்ப் பேசும் மக்கள் என்ற முறையில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருக்கும் அவர்களுக்குரிய சட்டத்தை மாற்றுவதோ தொடர்ந்து வைத்திருப்பதோ என்பது அவர்களின் பொறுப்பு. அது மத்திய அரசின் பொறுப்பல்ல.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள்தான் பெரும்பான்மையாக இருக்கின்றார்கள். 1833இல் வெள்ளையர்கள் இலங்கை முழுவதையும் நிர்வாக ரீதியாக ஒன்றிணைக்கும் வரையில் வடக்கு, கிழக்கு தமிழ் அரசர்களாலும் தமிழ் சிற்றரசர்களாலும் ஆளப்பட்டு வந்தன. தமிழ் மொழியே அவர்களின் மொழியாகவும் இருந்தது. கண்டிய மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனும் இன்னும் சில கண்டியத் தலைவர்களும் பிரித்தானியர்களுடன் 1815ல் செய்து கொண்ட உடன்படிக்கையில் தமிழிலேயே கையெழுத்து இட்டார்கள். இவ்வாறு தமிழுக்கும் தமிழருக்கும் என ஒரு அடையாளம் இலங்கையில் பண்டைக்காலம் தொட்டு இருந்து வருகையில் ஒரு நாடு ஒரு சட்டம் என்பதின் அர்த்தம் என்ன? இலங்கை ஒரு நாடு அல்ல.

அது சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், மலையக மக்கள் மேலும் பல சிறிய இன மக்கள் வாழும் நாடு. அதுவும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வந்துள்ளார்கள். அரேபியாவில் இருந்தும் தென்னிந்தியாவில் இருந்தும் வந்து கிழக்கு மாகாணத்தில் குடியேறிய பின் தமிழ் மொழியையே அவர்கள் தம் தாய் மொழியாக ஏற்றுக் கொண்டார்கள்.

இவ்வாறு இருக்கையில் இலங்கையானது ஒரு நாடாக இல்லாது பல நாடுகளைக் கொண்டிருக்கும்போது ஜனாதிபதி எவ்வாறு ஒரு நாடு பற்றி அறிவிக்கலாம்? மேலும் ஐந்து சட்டங்கள் நடைமுறையில் இருக்கும்போது இந் நாட்டில் எவ்வாறு ஒரு சட்டத்தை அமுல்படுத்த எண்ணலாம்? அத்துடன் இவை யாவற்றையும் சிறையில் இருந்து வந்த ஒரு குற்றவாளியைத் தலைவராகக் கொண்ட ஒரு செயலணியைக் கொண்டு எவ்வாறு நடைமுறைப்படுத்த இருக்கின்றார்? தேரருக்கு எந்தளவுக்கு சரித்திரம் தெரியும், சட்டம் தெரியும்?

ஜனாதிபதியின் போக்கு ஒன்றையே வலியுறுத்துகின்றது. இந்த நாடு சிங்கள பௌத்த நாடு என்றும், அதன் அடிப்படையில் இந்த நாட்டை ஒரு நாடாக அடையாளப்படுத்த வேண்டும் என்பதே அவரின் குறிக்கோள்.

சிங்கள பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சட்டத்தை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே இந்தச் செயலணியின் குறிக்கோளாகும்.

தமிழர்களைப் பொறுத்த வரையிலே அவர்களுக்கு எதிராக 1948ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் இனப்படுகொலையின் இன்னுமொரு பரிமாணமே இந்தச் செயலணி.

சகல இன மக்களும் இவ்வாறான தான்தோன்றித்தனமான சிங்கள பௌத்த வெறி கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு - என்றார்.

## நான் பௌத்தத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோரி மாநகர மேயருக்கு, அனுப்பியுள்ள கடிதம் தொடர்பில் சபையில் மேயர் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஒரு மதவாதி அல்லன். அத்தோடு பௌத்த மதத்துக்கு எதிரானவும் அல்லன். நான் இந்து மதத்தைச் சேர்ந்தவன். அதனால் ஏனைய மதங்களுக்கு எதிரானவன் அல்லன்.

என்னை மதவாதி எனச் சித்தரிக்கும் வகையில் நாகவிகாரை விகாராதிபதியால் யாழ். மாநகரமேயர் என எந்தவித மரியாதையும் வழங்காது கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, என்னைத் தவறான புரிதலுடன் இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்கள் என விகாராதிபதிக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அப்பகுதி புனித பிரதேசமாக இருக்க வேண்டும். நான் ஒரு இந்து மதத்தைச் சேர்ந்த ஒரு தமிழன். அந்தவகையில் நாம் எதிர்காலத்தில் அடையக் கூடிய தமிழ்த் தேசியத்தை ஒரு மதச் சார்பற்ற இடமாக அனைத்து மத மக்களும் தாம் விரும்பிய மதத்தை வழிபடுகின்ற அல்லது தங்களுடைய மத அனுஷ்டானங்களில் ஈடுபடுகின்ற இடமாக தமிழ்த் தேசம் கட்டியமைக்கப்படும் - என்றார்.

# வட பகுதி முஸ்லிம்களின் அவலங்களை நினைவு கூரல்

'வடபகுதி முஸ்லிம்களின் 31 வருட அவலங்களை நினைவு கூரல்' மற்றும் 'நேசக்கரங்கள்' இணை சஞ்சிகை வெளியீட்டு நிகழ்ச்சி நாளை வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணி முதல் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மஹ்மூத் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சமயப் பெரியார்கள், அறிஞர்கள், சமூகப் பணியாளர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள் கலந்து கொள்கின்றனர்.

இந் நிகழ்வானது 'நேசக்கரங்கள்' மக்கள் பணிமனையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# மரணம் 20; தொற்று 559

இலங்கையில் மேலும் 20 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 674 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் சாவடைந்த 20 பேரில் 11 ஆண்களும், 9 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் 5 ஆண்களும், 3 பெண்களுமாக 8 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 6 ஆண்களும், 6 பெண்களுமாக 12 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் நேற்று 559 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 38 ஆயிரத்து 320 ஆக எகிறியுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 373 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 4 ஆயிரத்து 376 ஆக அதிகரித்துள்ளது.



# மத அடையாளங்களை அமைக்க ஆரியகுளத்தில் அனுமதி இல்லை

## யாழ். மாநகர சபையில் தீர்மானம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான ஆரியகுளத்தில் எந்தவிதமான மத அடையாளங்களையும் அமைக்க அனுமதிக்க முடியாது என மாநகர சபையில் நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று மாநகர சபை மேயர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குறித்த தீர்மானத்தை நாக விகாரையின் விகாராதிபதிக்கு அனுப்பி வைப்பதாகவும் நேற்றைய அமர்வின்போது தீர்மானிக்கப்பட்டது.

## ஞானசாரரைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்ன நடக்கும் எனப் புதிதாக வகுப்பெடுக்கத் தேவையில்லையே. பையைத் திறக்காமலேயே பைக்குள் என்ன இருக்கின்றது என விளங்குகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் 'பேஸ்புக்' பதிவொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

பெயருக்குக்கூட ஒரு தமிழரை நியமிக்க மறுக்கும் இந்த மனிதரின் வெறுப்பு மனப்பான்மை வெறுப்பூட்டுவதாகவும் மனோ எம்.பி. மேலும் தெரிவித்துள்ளார்.

## 48 மணிநேரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

அரசின் பங்காளிக் கட்சிகளுடன் நடைபெற்ற சந்திப்பைத் தொடர்ந்தே, தொழிற் சங்கங்கள் இதனைத் தெரிவித்துள்ளன.

இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்களின் பணிப் பகிஷ்கரிப்பு நாடு முழுவதும் ஒரு நாள் நடைபெற்றால் அது 48 மணிநேர மின் தடையை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது எனத் தெரியவருகின்றது.

அரசு மோசமான ஒப்பந்தத்தை நிராகரிக்கவில்லை என்றால், நாடு முழுவதும் மின் தடை ஏற்படும் என்று மின்சார தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

# இந்திய மீனவர்கள் 2 பேரும் விடுதலை

(இ.கலையமுதன்)

யாழ். காரைநகர் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டபோது படகு விபத்துக்குள்ளாகிய நிலையில் கைதான இந்திய மீனவர்களை ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் விடுதலைசெய்து உத்தரவிட்டுள்ளது.

கடந்த வாரம் காரைநகர் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்ய முற்பட்டபோது அவர்கள் பயணித்த படகு, கடற்படையின் படகுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இந்தச் சம்பவத்தில் கடலில் வீழ்ந்த மீனவர்களில் இருவர் கடற்படையினரால் மீட்கப்பட்டபோதிலும் மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்திருந்தார்.

மீட்கப்பட்ட மீனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நடைபெற்றிருந்த நிலையில் அவர்களை விடுதலை செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் சில நாள்களில் குறித்த மீனவர்கள் இருவரும் தாயகம் திரும்புவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.